விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

சங்கு 23 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 07 புதன்கிழமை (22.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 003

## வெதுப்பக உற்பத்திகளுக்கு கட்டுப்பாட்டு விலை நீக்கம்

### பாண் உள்ளிட்ட பொருட்களின் விலை அதிகரிக்கும் அபாயம்




(கொழும்பு)
பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திப் பொருட்களுக்கான கட்டுப் 15

## பட்டக்கயிற்றில் தொங்கியவாறு 100 அடிக்கு மேல் பறந்த நபர்

### வடமராட்சியில் பரபரப்பு

(கரணவாய்)
பட்டம் விட சென்றவர் கயிற்றில் தொங்கியவாறு உயரப் பறந்த சம்பவம் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை புலோலி 15




## முச்சக்கரவண்டி கட்டணமும் அதிகரித்தது

(கொழும்பு)
நாட்டில் நள்ளிரவு தொடக்கம் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து முச்சக்கரவண்டிகளின் போக்குவரத்துக் கட்டணத்தை அதிகரிக்க தீர்மானித்துள்ள 15

### தமிழ் பேசும் கட்சிகள் கொழும்பில் சந்திப்பு

# நீண்ட இழுபறிக்குப் பின்னர் புதிய வரைபு தயாரானது



(கொழும்பு)
ஏற்கெனவே ரெலோ தயாரித்த வரைபையும் புதிதாக தமிழ் அரசுக் கட்சி தயாரித்த வரைபையும் இணைத்து புதிய வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனினும், முன்னர் ரெலோ தயாரித்த வரைபின் பெரும்பாலான உள்ளடக்கங்களுடன் சில சொற்பத மாற்றங்களுடனேயே இந்த வரைபு அமைந்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனாவால் 24 பேர் பலி

(கொழும்பு)
நாட்டில் மேலும் கொரோனாத் தொற்றால் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத் 15

### பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தம் செய்ய

## புலம்பெயர் மக்களுடன் அரசாங்கம் புரிந்துணர்வு

### ஆஸி அமைச்சரிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்தம் செய்வதற்கு புலம்பெயர் மக்களுடன் புரிந்துணர்வுடன் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அவுஸ்திரேலிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)



## உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

### விவசாய அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)
நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் உணவுப் பொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக விவசாய அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதித் ஜயசிங்க 15

### கட்சியின் முடிவை மீறியதால்

## இரு உறுப்பினர்களை நீக்கியது முன்னணி

(யாழ்ப்பாணம்)
உடன் அமுலுக்கு வரும்வகையில் இரு உறுப்பினர்களை கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்குவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்தார். 15

### இலங்கை மீது ஆதிக்கம் செலுத்த

## எந்த நாட்டுக்கும் உரிமை கிடையாது

### அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு



3ஆம் பக்கம் பார்க்க

## கலவையில் ஏற்பட்ட மாற்றமே சிலிண்டர் வெடிப்புக்குக் காரணம்

### ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுத் தலைவர்

(கொழும்பு)
எரிவாயு சிலிண்டர்களின் கலவையில் ஏற்பட்டுள்ள மாற்றமே வெடிப்புகளுக்கு முக்கிய காரணம் என எரிவாயு கசிவு தொடர்பான வெடிப்புகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு முடிவு செய்துள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களில் விக்கிரகங்கள் திருட்டு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்!

## கலாநிதி ஆறு.திருமுருகன் அவசர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருட்டுப்போயுள்ள கடவுள் விக்கிரகங்களை மீட்டெடுக்க பொறுப்பு வாய்ந்தவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் விடுத்த அவசர கோரிக்கையில்,

வலி வடக்கு பகுதியில் மயிலிட்டி, காங்கேசன்துறை, தெல்லிப்பழை ஆகிய இடங்களில் ஒரு வார காலத்துக்குள் விக்கிரகங்களைத் திருடியசம்பவங்கள் சைவ மக்களை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

ஆதிமயிலிட்டி விநாயகர் ஆலயத்தில் மூலவராக விளங்கிய நூற்றாண்டுப் பழமைவாய்ந்த விநாயகர் விக்கிரகத்தை பேர்த்து எடுத்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் நடைபெற்று ஓரிரு தினங்களில், காங்கேசன்துறை குமார கோவிலில் பழம் பெரும் பிள்ளையார் சிலையை, கோயிலை உடைத்து எடுத்துச் சென்றுள்ளனர்.

தெல்லிப்பழையிலும் வைரவர் ஆலயமென்றில் விக்கிரகங்களை திருடியுள்ளார்கள். யாரிதைசெய்கிறார்கள்? போர்ச் சூழலில் மிகவும் பாதிக்கப்பட்ட இத்திருக்கோவில்கள் தற்போது புனருத்தாரணம் செய்யப்பட்டு மீண்டும் கட்டியெழுப்பப்படும் வேளையில், இத் துன்பகரமான செயல் இடம்பெறுகின்றது.

பழைய பொருட்களை ஊர் தோறும் திரிந்துவாங்குபவர்கள் எமது ஆலய பொருட்களையும் திருடி, அண்மைக் காலத்தில் தென்பகுதியை நோக்கி கொண்டு சென்றுள்ளார்கள். பல ஆலயங்களில் பித்தளைவிளக்குகள், ஆலயத்தினுடைய பழம்பெரும் வாகனங்கள் களவுபோவது தொடருகிறது.



இவ்விடயம் தொடர்பாக வடமாகாண ஆளுநர், வடபிராந்திய பொலிஸ்மா அதிபர், வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆலயங்களில் தொடர்ந்து நடைபெறும் திருட்டுக்களை கட்டுப்படுத்த உடன் ஆவணசெய்வதும் அவசியம் என கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார். (ஞா)

# கந்தர்மடம் பகுதியில் விபத்து! இரு இளைஞர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சந்திக்கு அருகில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழில் இருந்து கோண்டாவில் நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் யாழ்.நகர் நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளிலும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில், நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஞா-33)

# எரிபொருட்களின் விலையை ஐ.ஓ.சி நிறுவனமும் அதிகரித்தது

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட விலைத் திருத்தத்திற்கு அமைவாக ஐ.ஓ.சி நிறுவனமும் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் எரிபொருட்களின் விலையை அதிகரித்துள்ளது.

இதன்படி 92 ஒக்டைன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை 177 ரூபாயாகும்.

ஒக்டைன் 95 விலை 23 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி புதிய விலை 210 ரூபாயாகும்.

டீசல் லீற்றர் ஒன்றின் விலை 7 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஐ.ஓ.சி டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 121 ரூபாயாகும்.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை 159 ரூபாயாகும். (ஞா)

# யாழில் பட்டப்பகலில் வீடுடைத்து திருட்டு!

## சந்தேகத்தில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதியில் உள்ள வீடொன்றை உடைத்து பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களை திருடிய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலத்திரனியல் உபகரணங்களை விற்பனை செய்தபோது சந்தேகநபரும் அதனை விற்பனை செய்ய உதவிய தரகரும் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை வீட்டில் உள்ளவர்கள் வெளியில் சென்றிருந்த நிலையில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

வீட்டிலிருந்த 43" தொலைக்காட்சி, சீடி பிளேயர் மற்றும் சமையல் அறை இலத்திரனியல் உபகரணங்கள் என்பன திருட்டுப்போயிருந்தன. அதுதொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தடயவியல் விசாரணைகளை அடுத்து குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் டில்ருக் தலைமையிலான அணியினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

திருடப்பட்ட இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனை செய்யப்பட்ட போது, அதனை விற்பனை செய்ய உதவிய தரகரும் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு வெள்ளவத்தையைச் சேர்ந்த 30 வயதுடைய சந்தேகநபர், திருமணம் முடித்து அச்சுவேலியில் வசித்து வருகிறார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில் கடந்த 10ஆம் திகதி அச்சுவேலியில் ஒருவரைத் தாக்கி அவர் அணிந்திருந்த மோதிரத்தைக் கொள்ளையிட்ட சம்பவத்தை சந்தேகநபர் ஒப்புக்கொண்டார்.

அதனடிப்படையில் அந்த மோதிரத்தை நிதி நிறுவனம் ஒன்றில் அடகு வைத்து வழங்கிய ஒருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர்கள் மூவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (ஞா-33)

# மேன்முறையீட்டு விசாரணை இன்று

2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு அமைவாக ஆணைக்குவிற்கு கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகள் தொடர்பில் ஜனாதிபதியினால் அண்மையில் நியமிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட புதிய ஆணைக் குழுவினால் மேன்முறையீடு விசாரணைகள் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த அமர்வில் ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் ஆணையாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஞா)

கார் விற்பனைக்கு

Nissan N 16 கார் விற்பனைக்குண்டு.

(9178)

077 817 7586

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

கலைமாணிப் பட்டப்படிப்பு (வெளிவாரி)
முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை,
இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2015

மேற்படி பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் முடிவடைந்துள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் **பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தினை** எதிர்வரும் **22.12.2021 ஆம்** திகதியிலிருந்து **30.12.2021 ஆம் திகதி வரையான காலப்பகுதியில்** அலுவலக நேரத்தில் (காலை 8.30 மணி- மாலை 3.45 மணி வரை) திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை 30.12.2021 இற்கு முன்னராக **திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் நேரடியாக கையளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.** பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல் மற்றும் பரீட்சை நேர அட்டவணை தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

**பதிவாளர்**
**21.12.2021**

(C3326)

# 713 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் நேற்றைய தினம்மேலும் 713 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 580,922 அதிகரித்துள்ளது. (ஞா)

காணிகள், கடைகள், வீடுகள் வாங்க விற்க

- யாழ். நகரப் பகுதியில் 7 பரப்புக் காணி மேல்மாடி கட்டடத்துடன் (யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக - கடந்த வருடம் 1 பரப்பு 8 கோடி என வங்கியால் பெறுமதியிடப்பட்டது.)
- யாழ். ஸ்ரான்லி வீதியில் மெயின் றோட்டில் 1 1/2 பரப்பு மற்றும் 5 1/2 பரப்பு, 3 1/2 பரப்பு புதிய வீட்டுடன்.
- யாழ். திருநெல்வேலி சந்தியில் 2 கடைகள்.
- பலாலி வீதி கந்தர்மடத்தில் 1 1/2 பரப்பு காணி.
- K.K.S வீதியில் 1 1/2 பரப்பு காணியுடன் கடை.
- நல்லூர் கோவில் வடக்கு வீதி, சங்கிலியன் வீதியில் 2 1/4 பரப்பு.
- யாழ். கைதடி A9 வீதியில் 14 பரப்புக் காணி.
- யாழ். சத்திரத்துச் சந்தி கொட்டடி வீதியில் 3 பரப்பு காணி.
- ஓமந்தையில் 14 ஏக்கர் தென்னந்தோட்டம்.
- ஓமந்தை வண்ணாங்குளத்தில் 5 ஏக்கர் நிலப் பரப்பில் கல்லுடைக்கும் கிரேசர்/ வீடு.
- யாழ். வேலணையில் 10 பரப்பு புகையிலைத் தோட்டக் காணி.
- யாழ். நல்லூர் கோவில் அருகாமையில் 2 1/2 பரப்பு.
- வவுனியா நகரப் பகுதியில் மிகப் பிரபல்யமான இடத்தில் 6 பரப்புக் காணி.
- A9 மாங்குளத்தில் 10 ஏக்கர் தோட்டத்துடன் கூடிய 2 வீடுகள்.
- யாழ். இராச பாதை வீதியில் 40 பரப்பு காணி (பிரித்து வழங்க முடியும்.)

உடன் விற்பனைக்கு உண்டு.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய இடங்களில் காணிகள் விற்க/ வாங்க தொடர்பு கொள்ளவும்.

இலங்கையில் எப்பாகத்திலும் கடைகள், காணிகள், வீடுகள் வாங்கவும் விற்கவும்.

(9182)

தொடர்பு
VIMB, வங்களாவடி, வேலணை.
077 522 1132
077 493 4336

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது ஆதிக்கம் செலுத்த எந்த நாட்டிற்கும் உரிமை இல்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் மீது தேவையற்ற வகையில் ஆதிக்கம் செலுத்த எந்த நாட்டுக்கும் உரிமை கிடையாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துமாறு இந்திய அரசாங்கத்திடம் கோருவதற்கான எழுத்து மூலமான வரைபை இறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்து இறுதிக்கட்ட பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள நிலையில் இது குறித்து நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சரிடம் கேள்வியெழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர், ஒவ்வொரு சமூகத்திற்கும் தங்கள் கருத்துக்களை வெளிப்படையாக தெரிவிக்க உரிமை உள்ளது என்றும் போராட்டம் நடத்துவது என்பது ஜனநாயக உரிமை, அதை அரசாங்கம் மதிக்கிறது .

அத்தோடு இலங்கை ஒரு சர்வாதிகார நாடு அல்ல என தெரிவித்த அவர் இறையாண்மையும் சுதந்திரமும் கொண்ட நாடு என்பதனால் வேறு நாடுகளினால் இங்கு ஆதிக்கம் செலுத்த முடியாது என அவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்தியாவும் இலங்கையும் அண்டை நாடுகள் என்பதோடு பல ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையில் ஆரோக்கியமான உறவு காணப்படுவதாகவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.(நி)

# உண்ணிக் காய்ச்சல் தொடர்பில் அவதானமாக செயற்படுங்கள்

## போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

உண்ணிக் காய்ச்சல், டெங்கு மற்றும் மலேரியா நோய் தொடர்பில் மக்கள் அவதானமாக செயற்படுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உண்ணிக்காய்ச்சல் என்பது மழைக்குப் பின்னரான காலத்தில் வயல்களில், தோட்டங்களில் வேலை செய்யும்போது தொற்றுகின்ற நோயாக காணப்படுகிறது. இதற்கு ஆரம்பத்திலேயே சிகிச்சை அளித்தால் பாதுகாக்கலாம், தவறும் பட்சத்தில் உயிரிழப்பு ஏற்படலாம். அத்துடன் நாய், பூனைகளுடன் தொடர்பில் இருப்பவர்கள் கவனமாக இருத்தல் வேண்டும். காய்ச்சல் வரும்போது உரிய மருத்துவ சிகிச்சை பெற வேண்டும்.

அதேபோல டெங்குக் காய்ச்சலும் இந்த மழையுடன் அதிகரித்துக் காணப்படுகிறது.

இலங்கை மலேரியாவை கட்டுப்படுத்தி உலக சுகாதார நிறுவனத்தினால் பாராட்டைப் பெற்றது

மலேரியா நோய் தற்போது கட்டுப்பாட்டில் உள்ளதனால் இலங்கையில் பரவுவதற்கு சாத்தியக்கூறுகள் குறைவு. ஆனால் வெளிநாடுகளில் இருந்து அதாவது மலேரியா தொற்று உள்ள நாடுகளில் இருந்து இங்கு வருவோர் கட்டாயமாக தமக்குரிய மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு நுளம்பு பெருகும் குப்பை கூழங்களை உடனடியாக அகற்றி நோய் பெருகாதவாறு பாதுகாக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-33)

# பால்மா விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

பால் மாவின் விலையை மீண்டும் திருத்தியமைக்க வேண்டியிருக்கும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்தது.

இலங்கையில் கடந்த முறை பால்மாவின் விலை அதிகரித்ததன் பின்னர் உலக சந்தையில் பால்மாவின் விலை சுமார் 10 வீதத்தால் அதிகரித்துள்ளதாக பால்மா இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அசோக பண்டார தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் வெளிநாட்டு கையிருப்பு நெருக்கடியால் கடன் பத்திரங்களை திறக்க முடியாமல் பால்மா இறக்குமதியாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

தற்போதைய பால்மா தட்டுப்பாட்டைச் சமாளிக்க இன்னும் இரண்டு மாதங்கள் ஆகும் என அசோக பண்டார சுட்டிக் காட்டினார். (நி)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
## சந்தை, இறைச்சிக் கடைக்கான 01.01.2022-31.12.2022 வரையுள்ள காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2022

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :-22/12/2021 இல் இருந்து 28/12/2021 ஆம் திகதி 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-29/12/2021 காலை 10.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-29/12/2021 காலை 10.30 மணிக்கு.
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 27/10/2021 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்விகள் கோரப்படுகின்றன.
04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
06. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ. இல | குத்தகை விபரம் | 2022 ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் (1%) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | **நெல்லியடி உப அலுவலகம்** | | | | |
| 1 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 51,100.00 | 511.00 | 500.00 | 100.00 |
| 2 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 551,101.00 | 5511.01 | 500.00 | 100.00 |
| 3 | நெல்லியடி மீன் சந்தை | 713,300.00 | 7133.00 | 500.00 | - |
| | **உடுப்பிட்டி உப அலுவலகம்** | - | | | |
| 4 | அந்திரான் சந்தை | 114,000.00 | 1140.00 | 500.00 | - |
| 5 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,080,000.00 | 10800.00 | 500.00 | 100.00 |
| 6 | சாண்டா சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,635,100.00 | 16351.00 | 500.00 | 100.00 |
| 7 | நவிண்டில் சந்தை | 30,000.00 | 300.00 | 500.00 | - |
| 8 | மண்டான் சந்தை | 47,249.00 | 472.49 | 500.00 | - |
| 9 | உடுப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 200,000.00 | 2000.00 | 500.00 | 100.00 |
| 10 | சாண்டா சந்தை கோழிக்கடை | 74,800.00 | 748.00 | 500.00 | 100.00 |
| | **கட்டைவேலி உப அலுவலகம்** | - | | | |
| 11 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 46,400.00 | 464.00 | 500.00 | 100.00 |

தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
22/12/2021
(C-3323)

# மணிவிழா வாழ்த்துக்கள் -2021

## கொட்டடி நமசிவாய வித்தியாலயம் யாழ்ப்பாணம்


திருமதி.ஜெயமலர் சிவலிங்கம்


திருமதி.சுதர்சினி யோகசுந்தரம்

மணிவிழா காணும்
எம் ஆசான்களே!
மரகத மணிகளாய்
நடராஜர் பாதங்களிலே
மாண்புடன், மாணவர்
கல்வியிலும் ஒழுக்கத்திலும்
மிளிர மனதாரப் பணிகள்
பல செய்தவர்களே;
உங்களுக்கு மணிவிழாக்
காண்பதில்
எம் கல்லூரி பெருமிதம்
அடைவதுடன்
நிறை வாழ்வு வாழ
வாழ்த்துகின்றோம்

Congratulations


திருமதி.பவானிதேவி தயாபரநாதன்



திரு.எம்.பி.அருளானந்தம்

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
கொட்டடி நமசிவாய வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(9170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஷஸ் டெஸ்ட் தொடர்; அஸி அணி வெற்றி



ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டியில், அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி 275 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

அடிலெய்ட் ஓவல் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 473 ஓட்டங்களை பெற்றிருந்த போது, தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மார்னஸ் லபுஸ்சேகன் 103 ஓட்டங்களையும் டேவிட் வோர்னர் 95 ஓட்டங்களையும் ஸ்டீவ் ஸ்மித் 93 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்ஸிற்காக 236 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டாவிட் மாலன் 80 ஓட்டங்களையும் ஜோரூட் 62 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனையடுத்து இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 230 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இதற்கமைய அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு 468 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

இதன்போது அவுஸ்திரேலிய அணி சார்பில், அதிகபட்ச ஓட்டங்களாக, மார்னஸ் லபுஸ்சேகன் மற்றும் ட்ராவிஸ் ஹெட் ஆகியோர் தலா 51 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து 468 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணி, 192 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி 275 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கிறிஸ் வோக்ஸ் 44 ஓட்டங்களையும் றொறி பர்ன்ஸ் 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மார்னஸ் லபுஸ்சேகன் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி, மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.(4-6)

# குண்டு போடுதல் போட்டி யாழ்.இளைஞனுக்கு தங்கம்




குண்டு போடுதல் போட்டியில் தேசிய ரீதியில் யாழ். இளைஞன் மிதுன்ராஜ் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடம் தோறும் நடத்திவரும் தேசிய விளையாட்டு விழாவின் 2021 ஆம் ஆண்டுக்கான 33 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா சுகததாச விளையாட்டரங்கில் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

இங்கு 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் 14.61 மீற்றர் தூரம் குண்டினை போட்டு தேசிய ரீதியில் தங்கப்பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டார் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சு.மிதுன்ராஜ். இவருக்கான பதக்கம் அணிவிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்றது. (4-281)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2475

### டிசாந்

In Exam hall
Staff : கடைசி பத்து நிமிசம் தான் இருக்கு எல்லோரும் paper ah கட்டிட்டு எழுதுங்க




Haiyoo.. பத்து நிமிசம் தான் இருக்கா நான் இன்னும் ரெண்டு Questions எழுதவே இல்லையே




சொல்லிக்கிட்டே இருக்கிறாயே தவிர paper வாங்கிட்டு அனுப்ப மாட்டேங்கிராரே

### கைஷனா




தம்பி யாரையாச்சும் லவ் பண்ணுறீங்களா?




மாரேஜ் ஆகி 2 குழந்தை இருக்கு அண்ணா

### மேரி

புகழ்ச்சியில் வளர்ப்பவனுக்கு தான் பிறர் துணை தேவை



முயற்சியில் வளர்பவனுக்கு தன் நம்பிக்கையே துணை

### அனோயன்

வரப் போற 2022 வருசம் எனக்கு எப்படி இருக்கும்?



முதல் ரெண்டு மாசம் அவமானப்பட்டு, அசிங்கப்பட்டு, துன்பப்பட்டு, துயரப்பட்டு, கஷ்டப்பட்டு, படாதபாடுபட வேண்டி இருக்கும்



ரெண்டு மாசத்துக்கு அப்புறம்?



அதுவே பழகிடும்

### பாவினி

வெயில் காலத்திற்கும் பனி காலத்திற்கும் நூல் அளவு தான் வித்தியாசம்



எப்படா குளிக்க போறோம்னு யோசிச்சா அது வெயில் காலம் ஏன்டா குளிக்க போறோம்னு யோசிச்சா அது பனி காலம்

### சக்தி

கல்யாணத்துக்கு போறவங்களுக்கு ரெண்டே மனநிலை தான்?
1.நமக்கு இந்த மாதிரி எப்ப செய்து வைப்பாங்க



2. இப்படித்தான் நம்மள வைச்சு செஞ்சாங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

22.12.2021
மார்கழி 07, புதன்கிழமை
திருதியை பிற்பகல் 3.28 மணிவரை
பூரம் முன்னிரவு 11.40 மணிவரை
சுபநேரம்- 4.55-6.25 மணிவரை
இராகு காலம்- 12.25 -1.55 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

வளவன்

**மேஷம்** — மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** — வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு, உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், செய் தொழில் மேன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** — பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், நண்பர்கள் சந்திப்புண்டு, எடுத்த காரியங்களில் ஆர்வம் கூடும்.

**கடகம்** — பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், போசன சுகமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** — தேவையற்ற குழப்பங்களை தவிர்ப்பது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், ரோக பயமுண்டு.

**கன்னி** — பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், போசன சுகமுண்டு.

**துலாம்** — உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** — தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ரோக பயமுண்டு.

**தனுசு** — பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், பொறுமையால் பெருமை காணும் நாள்.

**மகரம்** — சென்ற இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, போசன நன்மையுண்டு.

**கும்பம்** — சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**மீனம்** — வியாபார விருத்தியுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

உன் மௌனம் பேசினால் அதற்குத் தகுந்த மரியா[illegible]

# பொருளாதார நெருக்கடிகளுக்கு அரசியல் அமைப்பும் ஒரு காரணம்

## கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கமொன்று முன்னெடுக்கப்படுமென அரசாங்கம் கூறினாலும் அது எவ்வாறான வேலைத்திட்டம் என்பதில் எந்தவித தெளிவும் இல்லை.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளை காரணம் காட்டி புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்தை பிற்போட முடியாது. தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு அரசியல் அமைப்பும் ஒரு காரணமென கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்தார். (நி)


விண்ணக வாழ்வின்
10ம் ஆண்டின் நினைவலைகள்

வல்வையில் தாய் மடியில்
12 . 07 . 1942



பேரின்ப வான் வீட்டில்
22 . 12 . 2011

வைத்திய கலாநிதி
மரிசலீன்பிள்ளை மரியதாசன் [J.P]
(பேரின்பம் - வல்வெட்டித்துறை)
சுகாதார வைத்திய அதிகாரி (MOH) யாழ்.மாநகரசபை (2001-2011)

அன்பு அப்பா,
எம்மைக் கண்களாய்க் காத்து கரங்களில் ஏந்தி கனிவோடு பேசி
அன்பால் அரவணைத்து- எமக்காக
உடலை உருக்கி நாம் வாழ வழிசமைத்து
கடமையின் வடிவமாய் வைத்தியராய்- இறைவழியில்
உன்னதமாய் வாழ்ந்த உண்மை அன்பின் ஒளியை
எங்கள் அப்பாவை இன்னமும் தேடுகின்றோம்
எங்கு சென்றீர்கள்? ஏன் அப்பா எம்மைப் பிரிந்தீர்கள்

ஆவே மரியா
72, கோயில் வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(9171)

கண்ணீர் மல்க
குடும்பத்தினர்.



நீங்காத நினைவுகளுடன்
6 ஆம் மாதம்

பிறப்பு- 09.07.1991
இறப்பு -22.06.2021



செல்வி. மெர்லின் நிரோஷி எட்வேட்

யாழ்.சொலமன் லேன், பழைய பூங்கா வீதி
சுண்டுக்குழியைச் சொந்த இடமாகவும் இந்தியா
திருச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட
திரு.திருமதி. அருளானந்தம் எட்வேட்
மற்றும் அனஸ்ரிசியா யோகராணி
தம்பதிகளின் பாசமுள்ள மகள் ஆவார்.
6 ஆம் மாதம் நாளில்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

PLOT NO 1, Amman Nagar
RETTAIVAIKKAL, UGGAKKONDAN
THIRUMALAI, TRICHY, 620102, India.

(9176)

Lion.A.P.J.Manoharan
"Daisy, kudil"
104/ 18 A , Sangamita mawatha
colombo-13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவையாளரான மூதாட்டி 106 ஆவது வயதில் மரணம்



(சாவகச்சேரி)

சமூக நலனில் அக்கறை கொண்ட 106 வயது மூதாட்டியான சாவகச்சேரி-சங்கத்தானையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை லட்சுமி நேற்று செவ்வாய்க்கிழமை மரணமானார்.

குறித்த மூதாட்டி தனது 105 ஆவது பிறந்த தினத்தில் தனது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளின் நிதியுதவியில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அமைக்கப்பட்டு வரும் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு 15இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் பெறுமதியிலான மருத்துவ உபகரணங்களை தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் ஊடாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)

# காரைநகர் பிரதேச சபையின் பாதீடு மீண்டும் தோற்கடிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபையின் விசேட அமர்வு நேற்று தவிசாளர் மயிலன் அப்புத்துரை தலைமையில் சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது தவிசாளரினால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் இரண்டாவது தடவையாக சமர்ப்பிக் கப்பட்டது.

11 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 5 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்த நிலையில் பாதீடு தோற்கடிக்கப்பட்டது.

இரண்டு தடவைகள் காரைநகர் பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளதால் தவிசாளரும் தனது பதவியை இழந்துள்ளார்.

14 நாட்களுக்குள் புதிய தவிசாளர் தெரிவு இடம்பெற வேண்டும் என்பது சட்டமாகும். (5-4-33-104)

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்துமாறு பணிப்பு


(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் பகுதியில் கட்டுக்கடங்காமல் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வினை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கொடிகாமப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எதிரிசிங்கவிற்கு பணிப்பு விடுத்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை தென்மராட்சியில் இடம் பெற்ற பிரதேச மட்ட கலந்துரையாடல் ஒன்றின் பின்னர், பொது மக்கள் கொடிகாமத்தில் இடம் பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக அங்கஜன் எம்.பியின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில் அவர் உடனடியாக பொலிஸ் நிலையம் சென்று மணல் அகழ்வை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் எறியால் பிட்டி மயான வீதியில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம் பெற்று வருவதாகவும், இதனால் மயானத்திற்கான போக்குவரத்துப் பாதை இல்லாமல் போகும் நிலை காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளையில் அண்மைக்காலமாக கச்சாய் மற்றும் அல்லாரை கிராமங்களில் வாய்க்கால்கள் மற்றும் பொது வீதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றமை சுட்டிக்காட்டப்பட்டது.(5-4-30)



2022ஆம் ஆண்டிற்கான தேசிய வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான தென்மராட்சிப் பிரதேசமட்டக் கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டார். (படம்: சுபேசன்)




# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2022 ஆம் ஆண்டிற்கான பின்வரும் ஆறுமாத குறுங்கால கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அனைத்து கற்கை நெறிகளும் முற்றிலும் இலவசமான கற்கைநெறிகள் என்பதுடன் மாதாந்தம் நான்காயிரம் ரூபாய் வரையானஉதவுதொகை மற்றும் போக்குவரத்துப் பருவகாலச்சீட்டு என்பன பெற்றுக் கொள்ளக்கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கற்கை நெறிகளைப் பயில விரும்புவோர் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்பபாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு நேரடியாக தொழில்நுட்பவியல் கல்லூரியுடன் அல்லது 021 222 0028, 021 2212402 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ். தொழில் நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் எஸ். முகுந்தன் அறிவித்துள்ளார்.

கற்கை நெறிகளாவன, மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் பழுது பார்த்தல் MSR (NVQ 4), மோட்டார் வாகன உருச் செப்பனிடல் (Automobile Tinker NVQ 3), மோட்டார் வாகன வர்ணம் பூசுதல் (Automobile painter NVQ 3), வெல்டிங் தொழில்நுட்பம் (Welding NVQ 4). ஆடை தைத்தல் தொழில் நுட்பம் (Tailoring- Ladies & Gents -NVQ 4), மின்பாவனை உபகரணங்கள் திருத்துநர் (Electrical Appliance Maintenance Technician NVQ 3). மரவேலைத் தொழில்நுட்பம்-தளபாடம் ( Wood craftsman-Furniture NVQ 3), அலுமினியம் பொருத்துநர் (Aluminium Fabricator NVQ 4), கணிய அளவை உதவியாளர் AQS (NVQ 4), கணனி வன் பொருளுக்கான சான்றிதழ் (Computer Hardware NVQ 4), கணனி வலையமைப்புக்கான சான்றிதழ் (Computer Networking NVQ 4), கணனி கிராபிக் டிசைனர் (Computer Graphic Designer NVQ 4), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் (ICT NVQ 4) என்பனவாகும். (5)

## வலம்புரிக்கு நிகர் வலம்புரியே!



எத்தனை பத்திரிகை வெளிவந்தாலும் வலம்புரிக்கு ஈடாகுமா? யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் நாளிதழ்களில் மக்கள் விரும்பி வாங்கி வாசிப்பது வலம்புரியே. ஏனெனில் நடுவுநிலைமை வகித்து பக்கம் சாராமல் உள்ளதை உள்ளபடி எடுத்துரைப்பதில் வலம்புரிக்கு நிகர் வலம்புரியே!. இத்தகைய நல்லதொரு நாளிதழான வலம்புரிக்கு இருபத்திரண்டு வயது.

அழகாக அச்சாகி வாசகர் கைகளை அலங்கரிக்கும் எமது அபிமான பத்திரிகையான வலம்புரி நாளிதழானது இன்று போல் என்றும் நாதம் எழுப்பி மக்கள் மனம் நிறைந்த பத்திரிகையாகப் பிரகாசிக்க வேண்டுமென்று மனமார வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அத்துடன் விளம்பரம், அரசியல், ஆன்மிகம், வர்த்தகம் முதலிய பல்வேறு துறைசார்ந்த விடயங்களை காலத்தின் தேவை அறிந்து பக்குவமாகத் தந்துதவும் வலம்புரி தொடர்ந்து சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்.

**லயன் கௌரவ கலாநிதி கனகசபை சுந்தரலிங்கம்,**
**காரைநகர் சமாதான நீதிவான்களுக்கான அமைப்பின்**
**பிரதேச சபை அமைப்பாளர், கண்டி மாநகர இரட்னதீபம்**
**அமைப்பின் செயலாளர், காரை மணிகண்டன்.**

# நகரசபை கலைந்தாலும் அபிவிருத்திப் பணி தொடரும்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி மன்றத்தின் பதவிக்காலம் நிறைவடைந்து சபை கலைந்தாலும் ஆரம்பித்த அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் நகர சபையில் இட்ம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சபையின் பதவிக்காலம் நிறைவடைந்த பின்னர் உறுப்பினர்கள் நகரசபை விடயங்களில் தலையிடுவது சாத்தியப்படாத விடயமாக இருக்கும்.

எனவேதான் தற்போது எமது சபையால் முன்னெடுக்கப்படும் சிறுவர் பூங்கா அமைத்தல் உள்ளிட்ட முக்கியமான அபிவிருத்தித் திட்டங்களை தொடர்ந்தும் முன்னகர்த்திச் செல்வதற்கான ஏற்பாடுகளை இப்பொழுதே மேற்கொள்ள வேண்டும்.

நகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் துறை சார்ந்தவர்களை உள்ளடக்கி அபிவிருத்திக்குழு ஒன்றினை உருவாக்கும் பட்சத்தில் நகரில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி தடைப்படாமல் தொடர்ந்தும் முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 800 | 850 | 1000 |
| தக்காளி | 400 | 440 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 340 | 250 | 350 |
| கரட் | 300 | 480 | 550 |
| பூசணி | 60 | 70 | 100 |
| புடோல் | 300 | 300 | 320 |
| வாழைக்காய் | 70 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 280 |
| பாகற்காய் | 600 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 280 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 400 | 500 | 400 |
| லீக்ஸ் | 320 | 350 | 400 |
| பீற்றூட் | 280 | -- | 320 |
| கறிமிளகாய் | 600 | 700 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 380 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 300 |
| கீரை – 1 பிடி | 120 | 120 | 80 |
| தேசிக்காய் | 300 | 200 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 180 | 280 | 200 |
| வெங்காயப்பூ | 450 | 500 | -- |
| முள்ளங்கி | 200 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 40 |
| ஈரப்பலா | 60 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுதங்களுக்கான தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிட அனுமதி

(கொழும்பு)

அணு ஆயுதங்களைத் தடை செய்தல் தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காகவும், அதனை ஏற்று அங்கீகரிக்கும் செயன்முறையை ஆரம்பிப்பதற்காகவும் வெளி விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அணு ஆயுதங்களைப் பரந்தளவில் தடை செய்வதற்காக உலகளாவிய ரீதியில் முதலாவது பல தரப்பு ஒப்பந்தமான, அணு ஆயுதங்களைத் தடை செய்தல் தொடர்பான ஒப்பந்தம் 122 நாடுகளின் ஒத்துழைப்புடன் 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் சபையில் நிறைவேற்றப்பட்டது. குறித்த ஒப்பந்தம் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இதுவரை அதற்காக கையொப்பமிட்ட 86 நாடுகளில் 57 நாடுகள் ஏற்று அங்கீகரித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரில் இவ் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக இலங்கையும் அதற்குச் சார்பாக வாக்களித்து ஒத்துழைப்பு வழங்கியதுடன், அதற்கான உலகளாவிய தொடர் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக ஊக்குவித்தும் வருகிறது.

குறித்த ஒப்பந்தத்தில் பங்கெடுக்கும் நாடுகள் அணு ஆயுதமோ அல்லது வேறு அணுவாலான வெடிபொருட்களை தயாரித்தல், பரிசோதித்தல், நிர்மாணித்தல், உற்பத்தி செய்தல், பரிமாற்றுதல், தன்னகத்தே வைத்திருத்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதாக அச்சுறுத்தல் அல்லது தமது நிலப்பரப்பில் அவ்வாறான ஆயுதங்களை நிலைப்படுத்துவதற்கு இடமளித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு எவருக்கேனும் ஒத்துழைத்தல், ஊக்குவித்தல் அல்லது தூண்டுதல் போன்ற செயற்பாடுகள் குறித்த ஒப்பந்தத்தின் மூலம் தடை செய்யப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுதல் பேரழிவு ஆயுதங்களுக்கு எதிரான மற்றும் அணு நிராயுதத்தன்மைக்கு சார்பாகவுள்ள இலங்கையின் கொள்கை ரீதியான நிலைப்பாட்டுடன் பொருத்தப்பாடானதாகும்.

அதற்கமைய, இலங்கை குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காகவும், அதனை ஏற்று அங்கீகரிக்கும் செயன்முறையை ஆரம்பிப்பதற்காகவும் வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

# பெற்றோலிய களஞ்சிய முனைய தலைவர் பதவி விலகுகிறார்

(கொழும்பு)

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனைய தலைவர் எம். உவைஸ் மொஹமட், தாம் பதவி விலகப்போவதாக அறிவித்துள்ளார்

எரிபொருட்களின் விலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு பாரிய அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையிலேயே இந்தப் பதவி விலகல் அறிவிக்கப்பட்டுள்ளது

எனினும் பதவி விலகலுக்கான உரிய காரணங்கள் இன்னும் வெளியாகவில்லை. (நி)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. குமாரவேலு கண்ணதாசன்
SLPS-2, BA,PGDE, (Merit) MEd



திருமதி.சகானா துவாரகன்
B.Sc, MIT, PGDE (Distinction)



திருமதி சுதாகினி றமணன்
B.F.A. Music, PGDE

17.10.2021 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட எமது பாடசாலை அதிபர் திரு. **குமாரவேலு கண்ணதாசன்** அவர்களையும் 26.09.2021 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பட்டத்தைப் பெற்றுக் கொண்ட எமது பாடசாலை ஆசிரியர்களான திருமதி.**சகானா துவாரகன்** மற்றும் திருமதி **சுதாகினி றமணன்** ஆகியோரை யா/ நாகர்கோவில் மகா வித்தியாலயம் சார்பில் வாழ்த்துகிறோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**யா/ நாகர்கோவில் மகா வித்தியாலயம்.**

(C-3320)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி.

**சுலபாமதி கணேசமூர்த்தி**

(Trained- Primary, B.Com. Dip.in. Edu,M.Ed, SLPS-1)

01.09.1992 இல் ஆசிரிய சேவையில் இணைந்து 13.11.2009 இல் அதிபர் சேவையில் பொலிந்து 26.01.2018 அதிபர் சேவை தரம் 1 இல் பதவி உயர்வு பெற்ற எமது பாடசாலையின் அதிபர் திருமதி. **சுலபாமதி கணேசமூர்த்தி** அவர்களை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(9160)

**பாடசாலை நலன்புரிக் கழகம்,**
**யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.**

## 60ஆவது அகவையில் சேவை நயப்பு



திருமதி.

**கமலாம்பிகை சிவசுந்தரம்**

[பயிற்றப்பட்ட ஆசிரியை- மனைப்பொருளியல்]

யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் எட்டு வருடங்கள் மனைப்பொருளியல் ஆசிரியையாகவும் தமது வாழ்வில் முப்பத்து மூன்று வருடங்களாக மனைப்பொருளியல் ஆசிரியையாகவும் அளப்பரிய கல்விச் சேவையாற்றி 17.05.2021 அன்று அகவை அறுபதில் ஓய்வுபெற்ற திருமதி. **கமலாம்பிகை சிவசுந்தரம்** அவர்களின் **சேவை விபரம்**

| | |
|---|---|
| யா/ பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க. பாடசாலை | -17.08.1988-31.03.1991 |
| கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | - 01.04.1991-31.12.1992 |
| யா/ பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க. பாடசாலை | -01.01.1993- 31.03.1993 |
| யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை | - 01.04.1993-11.06.2013 |
| யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | - 12.06.2013- 17.05.2021 |

வாழ்த்துவோர்:
**பாடசாலை நலன்புரிக் கழகம்,**
**யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகெங்கும் வேகமெடுக்கும் ஒமிக்ரோன்

# பயணங்கள், கொண்டாட்டங்களை ரத்து செய்யுங்கள்

## உலக சுகாதார அமைப்பு கோரிக்கை



(ஜெனிவா)

**ஒமிக்ரோன் உருத்திரிபு வைரஸ் உலகெங்கும் மிக வேகமாகப் பரவி வரும் நிலையில் திட்டமிடப்பட்டுள்ள கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள் மற்றும் விடுமுறைக்கால சுற்றுப் பயணங்களை இரத்துச்செய்யுமாறு உலக சுகாதார அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

தொற்று நோயால் வாழ்க்கையை இழப்பதை விட கொண்டாட்டங்களைத் தியாகம் செய்வது சிறந்தது என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோரஸ் அதானோம் தெரிவித்தார்.

புதிய ஒமிக்ரோன் திரிபு வைரஸ் டெல்டாவை விட மிக வேகமாக பரவுகிறது என்பதற்கான ஆதாரங்கள் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் அமெரிக்காவில் முதல் ஒமிக்ரோன் வைரஸுடன் தொடர்புடைய மரணம் நேற்று முன்தினம் பதிவானது.

ஒமிக்ரோன் பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக கிறிஸ்மஸ் காலத்தில் நெதர்லாந்து கடுமையான சமூக முடக்க நிலையை அறிவித்துள்ளது.

பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி உட்பட பல நாடுகள் - கொவிட் கட்டுப்பாடுகளை கடுமையாக்கியுள்ளதுடன், பயணக் கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளன.

லண்டனின் டிராஃபல்கர் சதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்தாண்டு கொண்டாட்டங்கள் பொது பாதுகாப்பு நலன்களைக் கருத்தில் கொண்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு மேயர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை செய்தியாளர் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோரஸ் அதானோம் கெப்ரேயஸ், ஒமிக்ரோன் உருத்திரிபு வைரஸ் உலகெங்கும் மிக வேகமாகப் பரவி வரும் நிலையில் திட்டமிடப்பட்டுள்ள கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள் மற்றும் விடுமுறைக்கால சுற்றுப்பயணங்களை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுத்தார்.

உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள மக்கள் தொகையில் 70% பேர் அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்குள் தடுப்பூசி போடப்படுவதை உறுதி செய்வதன் மூலம் 2022 இல் தொற்று நோயை முடிவுக்குக் கொண்டு வர முடியும் என அதானோம் கெப்ரேயஸ் வலியுறுத்தினார். (நி)

# ஜப்பானில் மூவருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்

(டோக்கியோ)

கைதிகள் மூவருக்கு ஜப்பானில் நேற்று செவ்வாய்க்கிழமை மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. கடந்த 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிறைவேற்றப்பட்ட மரண தண்டனை இதுவாகும்.

அத்துடன், ஜப்பானில் கிஷிடா-கியோடா பிரதம ராக பதவி ஏற்றபின் வழங்கப்படும் முதல் மரண தண்டனையும் இதுவாகும்.

மரண தண்டனைக்கு எதிராக ஜப்பானிலும் சர்வதேச அளவில் மனித உரிமை அமைப்புக்கள் குரல் கொடுத்து வருகின்ற போதும், கடுமையான குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கும் அரசின் முடிவுக்கு பொதுத் தளத்தில் ஆதரவு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பல தசாப்தங்களில் மலேசியா கண்டிராத பெரும் வெள்ளம்

(கோலாலம்பூர்)

பல தசாப்தங்களில் மலேசியா கண்டிராத மிக மோசமான வெள்ளம் காரணமாக குறைந்தது 14 பேர் உயிரிழந்துள்ளதுடன் பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். வார இறுதியில் மூன்று நாட்களாக பெய்த கடும் மழையால் எட்டு மாநிலங்களில் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

இதனால் நகரங்கள் மற்றும் கிராமங்கள் நீரில் மூழ்கின. பலர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பலி எண்ணிக்கை கடுமையாக உயரும் என அஞ்சப்படுகிறது.

கோலாலம்பூர் நகரின் சில பகுதிகள் 1971 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் வெள்ளத்திற்குப் பிறகு ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் இதுவாகும். (நி)

# சொந்தச் செலவில் விண்வெளிக்கு சென்று திரும்பிய ஜப்பானியர்

(டோக்கியோ)

சொந்த செலவில் விண்வெளி சென்ற ஜப்பானை சேர்ந்த மிகப்பெரும் கோடீஸ்வரரான யுசாகு மெசாவா சோயுஸ், பத்திரமாக பூமி திரும்பியுள்ளார்.

இதன்மூலம் 12 ஆண்டுகளுக்கு பின் சொந்த செலவில் விண்வெளிக்கு சென்ற முதல் நபர் என்ற பெருமை 46 வயதான யுசாகு மெசாவா பெற்றார். இந்த விண்கலம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கஸகஸ்தான் நாட்டின் தென் கிழக்கில் உள்ள பாலைவன பகுதியில் பத்திரமாக தரையிறங்கியது. (நி)


யாழ் மருத்துவ சங்கத்தால் நடாத்தப்படும்

பாடசாலை மாணவர்களிற்கான சித்திர போட்டி

2021/2022

தலைப்பு

"சிறுவர் பாதுகாப்புப் பற்றி நாமே வரைவோம்"

மேற்குறிப்பிட்ட தலைப்பில் கீழக்காணும் வயது பிரிவுகளில் மாணவர்களாகிய நீங்கள் உங்கள் ஆக்கங்களை வரைந்து எமக்கு அனுப்பி வைக்கவும்.

இப் போட்டி வயது அடிப்படையில் 3 பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.

பிரிவுகளாவன: 5-8+, 9-11+, 12-16 வயதினர்



செய்ய வேண்டியவை :-

1) உங்கள் ஆக்கங்களை ஒரு A3 ஓவியக் கடதாசியில் வரைந்து அதன் பின் புறத்தில் கீழ்க்காணும் விபரங்களை தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.
- முழுப்பெயர்
- வயது
- பாடசாலை
- வகுப்பு (ஆண்டு)
- முகவரி
- பெற்றோர் தொலைபேசி இலக்கம்

2) எந்த முறையிலும் தீட்டலாம் ஒருவர் ஆகக்கூடியது 2 சித்திரங்களை சமர்ப்பிக்கலாம்.

3) வலய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், பரிசில்கள் வழங்கப்படும். பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

4) ஆக்கங்களை கீழ்காணும் மின்னஞ்சல்/தபால் முகவரிக்கு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ ஜனவரி 15th திகதி 2022 இற்கு முன் அனுப்பவும்.

மின்னஞ்சல் : artjma2021@gmail.com

021- 222 1313

தலைவர், யாழ் மருத்துவச்சங்கம் யாழ் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(9177)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் 1.4 வீதமானோரே 3 ஆவது தடுப்பூசியை பெற்றுள்ளனர்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 1.4 வீதமானோர் மாத்திரம் மூன்றாவது தடுப்பூசியான பைசர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டிருப்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் தெரிவித்தார்**

கிளிநொச்சி மாவட்டத்தில் கொவிட் -19 தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கும் போது,

மூன்றாவது தடுப்பூசியை 1.4 வீதமான மக்கள் மாத்திரமே பெற்றுள்ளனர். அதாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் பலர் ஆர்வம் காட்டவில்லை.

இது தொடர்பாக ஆராய்ந்த போது கடந்த காலத்தில் போடப்பட்ட ஊசிகள் கிராம மட்டங்களில் சென்று போடப்பட்டன.

அது போலவே வீடுகளுக்குச் சென்று போடுவதையே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் குறித்த ஊசியை அவ்வாறு வழங்க முடியாது. ஒரே தடவையில் ஆறு பேருக்கான ஊசி ஏற்ற வேண்டும்.

கிராமங்களிலே கொண்டு சென்று போடுவதற்கு குளிரூட்டி வசதிகள் இல்லை. அத்துடன் உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறையும் காணப்படுகிறது.

ஆகவே தற்போது மருத்துவமனையில் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை போன்றவற்றில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 81 வீதமானவர்கள் முதலாவது தடுப்பூசியையும் 66 வீதமானவர்கள் இரண்டாவது தடுப்பூசியையும்பெற்றுள்ளனர்.

மூன்றாவது தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி வழங்கப்படுகிறது. இதுவரை 1.4 வீதமானவர்கள் மாத்திரமே இதனைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் 53 வீதமான மாணவர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர் என்றும் தெரிவித்தார். (5-4-315)



உலக மண் தினத்தை முன்னிட்டு எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச்சூழல் கழகமும் கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாசாலை சுற்றாடல் கழகமும் இணைந்து நடத்திய மண் தின விழிப்புணர்வு (கட்டுரை, சுவரொட்டி, கவிதை) போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று பாடசாலை அதிபர் கே.திலீபன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் பேராசிரியர் ஆர்.கபிலன் கலந்து கொண்டார்.

(படம்:-சிவசாந்தன்)

# சி சி ரி வியில் சிக்கிய சைக்கிள் திருடன்

(சாவகச்சேரி)

மீசாலைப் பகுதியில் துவிச்சக்கர வண்டி திருட்டில் ஈடுபட்ட நபரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து சாவகச்சேரி பொலிஸாரிடம் நேற்று செவ்வாய்க் கிழமை ஒப்படைத்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மீசாலைப் பகுதியில் துவிச்சக்கரவண்டி திருடிய நபரை சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் பொதுமக்கள் பிடித்து சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (5-4-30)



மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஊடாக (மெசிடோ) வடக்கில் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 2700 ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ தலைமையில் மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் காயாக்குளி கிராமத்தில் இடம்பெற்றது.

(படம் :- ஜோசப் நயன்)

# மருத்துவர்கள் பணிப்பகிஷ்கரிப்பு நோயாளர்கள் சிரமம்

## மருத்துவர் யமுனாநந்தா சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் மருத்துவர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதன் காரணமாக நோயாளர்கள் சிரமத்துக்கு உள்ளாகினர் என யாழ். போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

நேற்று யாழ். போதனா மருத்துவமனையில்நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச மருத்துவ சேவையில் உள்ளோர் நேற்று நாடு பூராகவும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட நிலையில் யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவ சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றன.

குறிப்பாக வெளிநோயாளர் பிரிவு இயங்கவில்லை. அத்தியாவசியமான மருத்துவ சேவைகள் மாத்திரம் இயங்கின. அத்தோடு வெளிநோயாளர் பிரிவில் நாய்க்கடிக்கு உள்ளாகியோருக்கு சிகிச்சை நடைபெற்றது. அதேபோல் கொரோனாத் தடுப்பு மருந்து வழங்கல் மற்றும் சிகிச்சை அளிக்கப்பட்டது.

மேலும் அத்தியாவசியமான சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் தெரிவித்தார். (4-5-33)

# சேதன உரத்தினால் பயனில்லை வட்டக்கச்சி விவசாயிகள் கவலை

(குருமபுரம்)

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சேதன உரத்தினால் தமக்கு எந்தவித பயனும் கிடைக்கவில்லை என வட்டக்கச்சி இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழ் 3000 இற்கு மேற்பட்ட ஏக்கரில் காலபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யூரியா தடை செய்யப்பட்ட நிலையில் தங்களுக்கு யூரியாவுக்கு பதிலாக வழங்கப்பட்ட நனோ திரவ உரம் மற்றும் Eco vita என்ற திரவ உரங்களினால் எந்தவித பயனும் கிடைக்கவில்லை என தெரிவித்தனர்.



இந்த சேதன உரத்தினால் கால்களில் பாதிப்பு ஏற்படுவதாகவும் பன்றிகள் இந்த உரத்தின் மணத்திற்கு வயலுக்கு வந்து நெற்பயிரை சேதப்படுத்துவதாகவும் தெரிவித்தனர்.

நெற்கதிர்களில் மணிகள் குறைவாகவும் தற்போது 20 மணிகளும் பதர் மணிகளாகவும் காணப்படுவதாக தெரிவித்தனர். ([illegible])

# ஆய்வு மாநாட்டிற்கான ஆய்வுகளை சமர்ப்பிக்கவும்

## வவு.பல்கலை. வியாபார கற்கைகள் பீடம்

(நெளுக்குளம்)

வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபாரக் கற்கைகள் பீடத்தினால் நடைமுறைப்படுத்தப் படவுள்ள ஆய்வு மாநாட்டில் ஆய்வுகளைசமர்ப்பிக்குமாறுவவுனியா பல்கலைக்கழகம் கோரியுள்ளது.

இது தொடர்பாக வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபார கற்கைகள் பீடத்தினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வவுனியா பல்கலைக் கழக வியாபாரக் கற்கைகள் பீடமானது 4 ஆவது வியாபாரக் கற்கைகள் ஆய்வு மாநாட்டினை நடத்தவுள்ளது. குறித்த மாநாடு இம்முறை "பெரும் பரவல் தொற்று நோய்க்கான வியாபாரத் தயார் நிலை முன்னுதாரண மாற்றத்திற்கான நேரம்" என்ற ஆய்வுக்கருப்பொருளில் 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நடத்த தீர்மானித்துள்ளது.

ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும். இம்மாநாடு தொடர்பான மேலதிக தகவல்களினை https://fbs.vau.ac.lk/rcbs 2022/ என்ற இணையத் தளத் தில் அல்லது ஆய்வு மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் யூட்லியோனிடம் (077 340 0855) பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(4-5-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2021 - 13.01.2022



**சவாலான வேலைகளைக் கூட சாதாரணமாக முடிக்கும் மிதுன இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசியைக் குரு பார்க்கின்றார். 'குரு பார்க்கக் கோடி நன்மை' என்பதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். நல்ல சந்தர்ப்பங்கள் இல்லம் தேடி வரும். நம்பிக்கைக்குரிய விதம் நண்பர்கள் நடந்து கொள்வர். புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**கும்ப குருவின் சஞ்சாரம்**

கும்ப இராசியில் மாதத் தொடக்கத்தில் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். அவரது பார்வை உங்கள் இராசியில் பதிவது மட்டுமல்லாமல் 3, 5 ஆகிய இடங்களிலும் பதிவாகின்றது. எனவே முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள். இதுவரை இருந்த தடைகளும் தாமதங்களும் அகலும்.

கடை திறப்புவிழா, கட்டடத் திறப்பு விழா போன்ற புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். 'இரவு-பகலாகப் பாடு பட்டும் இதுவரை பலன் இல்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது நிலைமை சீராகி நிம்மதி கிடைக்கும். பொருளாதாரத்தில் இதுவரை இருந்த தொய்வு அகலும்.

**மகர புதனின் சஞ்சாரம்**

மார்கழி 12 ஆம் திகதி மகர இராசிக்குப் புதன் செல்கின்றார். அங்குள்ள சனியோடு இணைந்து உங்கள் இராசி நாதன் புதன் செயற்படும் பொழுது அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தால் ஏற்படும் பாதிப்புகள் கொஞ்சம் குறையலாம்.

'மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும்'. மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். உத்தியோகத்தில் நீண்ட நாட்களாக வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். பாதியில் நின்ற கட்டடப் பணி மீதியும் தொடரும். வாகனப் பழுதுச் செலவுகள் தவிர்க்க முடியாததாகும்.

**தனுசு சுக்கிரனின் சஞ்சாரம்**

மார்கழி மாதம் 25 ஆம் திகதி தனுசு இராசிக்குச் சுக்கிரன் வக்கிர இயக்கத்தில் வருகின்றார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் சப்தம ஸ்தானத்தில் சகாய ஸ்தானாதிபதி சூரியனோடு இணைவதால் பிள்ளை




களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு நீங்கள் எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். அரசு வழியின் ஆதரவு மூலம் தொழில் வளத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

## தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்!

நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வழக்குகள் நல்ல முடிவிற்கு வரும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்**

மார்கழி 27 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் வக்கிர இயக்கத்தில் செல்கின்றார். இராசி நாதன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியையே பார்ப்பது யோகம் தான். மங்கல ஓசை மனையில் கேட்க வழி பிறக்கும். செய் தொழிலில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருவீர்கள்.

பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வெளிநாடு சென்று பணி புரியும் வாய்ப்புகள் கூட ஒருசிலருக்கு உண்டு. பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும். இம்மாதம் குரு வழிபாடு குதூகலம் வழங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். ஆதாயம் தரும் தகவல்கள் அதிகம் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். விவாகப் பேச்சு முடிவாகும். பணிபுரியும் பெண்களுக்கு சம்பள உயர்வும், சலுகைகளும் திருப்தி தரும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**பொது வாழ்வில் ஈடுபட்டு புகழ் குவிக்க விரும்பும் கடக இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, கண்டகச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. அஷ்டமத்து குருவின் சஞ்சாரமும் இருக்கிறது.

எனவே இம்மாதம் வரவைக் காட்டிலும் செலவு கூடுதலாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் மந்த நிலை உருவாகும்.

## கொடுக்கல்-வாங்கல்களில் மந்த நிலை உருவாகும்!

**அஷ்டமத்து குருவின் சஞ்சாரம்**

மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைத்துள்ளார். இது அவ்வளவு நல்லதல்ல. நினைத்த காரியம் நிறைவேறுவதில் தாமதங்கள் ஏற்படும். தொடர் விரயங்களால், உறவுகளோடு பகை ஏற்படும். கொடுத்த கடன்கள் வசூலாகாமல் போகலாம். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலாது. குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கியத் தொல்லைகளும், அதனால் மருத்துவச் செலவுகளும் உண்டு.

பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மேலிடத்து நிர்ப்பந்தம் அதிகரிக்கும். எதிர்காலத்தைப் பற்றிய பயம் உருவாகும். எதையும் யோசித்துச் செய்வது நல்லது.

**மகர புதனின் சஞ்சாரம்**

மார்கழி 12 ஆம் திகதி மகர இராசிக்கு புதன் செல்கின்றார். கண்டகச் சனியின் ஆதிக்கத்தோடு விரயாதிபதி புதனும் சேர்வதால் மாமன், மைத்துனர் வழியில் மனக்கசப்பு ஏற்படும். செயற்பாடுகளில் தடைகளும், தாமதங்களும் அதிகரிக்கும்.

கூட்டு முயற்சிகளில் இருந்து பிரிய நேரிடலாம். புதிய பொறுப்புகள் கை நழுவிச் செல்லலாம். குடும்பத்தில் உள்ளவர்கள், உங்கள் செயற்பாடுகளில் குறைகளைக் காண்பர். புதியவர்களை நம்பி ஏதுவும் செய்ய இயலாது. பொருளாதாரப் பற்றாக்குறையின் காரணமாக சங்கிலித் தொடர் போல கடன் சுமை உருவாகலாம். செய்தொழிலில் திடீர் சிக்கல்கள் உருவாகும். வியாபார விரோதங்களை வளர்த்துக் கொள்ள வேண்டாம்.

**தனுசு சுக்கிரனின் சஞ்சாரம்**

மார்கழி 25 ஆம் திகதி தனுசு இராசிக்குச் சுக்கிரன் வக்கிர இயக்கத்தில் வருகின்றார். 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் தனாதிபதி சூரியனுடன் இணைந்து 6 இல் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோகத்தில் ஒரு சிலருக்கு நல்ல மாற்றங்கள் ஏற்படலாம்.

வெளிநாட்டில் இருந்து நல்ல நிறுவனங்களில் பணி புரியும் அழைப்புக




ளும் வரலாம். தொழில் வளர்ச்சிக்கு அரசுவழிச் சலுகைகளும் கிடைக்கும். பொதுவாழ்வில் புதிய திருப்பங்கள் ஏற்படும். நீண்ட நாட்களாகத் தாமதித்து வந்த காரியங்கள் துரிதமாக நடைபெறலாம். உடல்நலம் சீராக மாற்று மருத்துவம் கைகொடுக்கும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்**

மார்கழி 27 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் வக்கிர இயக்கத்தில் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன்.

12 இற்கு அதிபதி 6 இல் சஞ்சரிக்கும் இந்த நேரம் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கு ஏற்ப சில நல்ல வாய்ப்புகளும் இல்லம் தேடி வரலாம்.

செலவுகள் குறைந்து சேமிக்கத் தொடங்கும் சூழல் உருவாகும். வியாபாரம் வெற்றி நடைபோடும். குறைந்த விலையில் என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது கூடுதல் இலாபத்தோடு விற்க நேரிடும். இம்மாதம் அனுமன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் குடும்பப் பொறுப்புகள் கூடும். விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்கள், இடமாற்றங்களைப் பற்றி சிந்திப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமைக் குறைவு ஏற்படாமல் இருக்க விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். உடல் ஆரோக்கியத்தில் மிகமிக கவனம் தேவை.

பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். வழிபாட்டால் திருப்தி காணலாம்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்மா வாங்க பணமில்லாத நாட்டில்

# சீனக் கப்பலுக்கு நட்டஈடா?

## சீலரத்ன தேரர் சீற்றம்



(கொழும்பு)

நாட்டில் பிள்ளைகளுக்கு பால் மாவை கொள்வனவு செய்ய பணமில்லை. 6.7 மில்லியன் டொலரை கழிவு கப்பலுக்கு செலுத்த பணம் உள்ளதா? என ஜனசெத பெரமுனவின் தலைவர் பத்ரமுல்லே சீலரத்ன தேரர் கேள்வி எழுப்பினார்.

பலாங்கொடை புட்டுபாஹின்ன பிரதேசத்தில் நடைபெற்ற கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே தேரர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவர்கள் விலங்குகள். பாம்புகள் இவர்களை விரட்டியடிக்க வேண்டும்.

6.7 மில்லியன் டொலர் இலங்கைக்கு சிறிய தொகை எனவும் நாட்டில் பணம் இருப்பதாகவும் சீனாவின் கழிவு கப்பலுக்கு பணத்தை செலுத்த முடியும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறினார். இந்தப் பணம் ஜோன்ஸ்டனின் வீட்டிலிருந்தா கொண்டுவரப்பட்டது.

இவர்கள் நாட்டை முன்னேற்ற ஆட்சிக்கு வந்தவர்கள் அல்ல. நாட்டை அழிக்க வந்தவர்கள். நாட்டின் அனைத்து வளங்களையும் வெளிநாட்டவருக்கு விற்று சாப்பிடுகின்றனர்.

கோட்டாபய, பசில், மகிந்த, நாமல் இவர்களில் எவராக இருந்தாலும் இவர்களுக்கு தூர நோக்கு கிடையாது. இவர்கள் தமது ஏழு தலைமுறைகளுக்கு தேவையான பணத்தை சம்பாதித்துள்ளனர்.

இன்னும் சிறிது நாளில் மக்களையும் விற்று விடுவார்கள். அனைத்து அரசியல் கட்சிகளும், இன, சாதி பேதங்கள் இன்றி இணைந்து ராஜபக்ஷவினரை இந்த நாட்டில் இருந்து துடைத்தெறிய வேண்டும் என தேரர் தெரிவித்தார். (நி-5)

# பேருந்து கட்டணத்தை அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகளை திருத்துவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானத்திற்கு அமைவாக பேருந்து கட்டணத்தை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேருந்துக் கட்டணத்தை குறைந்தபட்சம் 25 ரூபாயாக அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என அச்சங்கம் தெரிவித்துள்ளது.

அண்மையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட போதும் நாடு எதிர்கொண்ட நிலைமையைக் கருத்தில் கொண்டு பேருந்து கட்டணத்தை அதிகரிக்கவில்லை எனவும் உதிரிப் பாகங்கள் உள்ளிட்டவையின் விலை அதிகரித்துள்ள நிலையில் பேருந்து கட்டணத்தை அதிகரிப்பது பொதுமக்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தும் என்பதால், தீர்வை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் அச்சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

மேலும் பேருந்து கட்டண அதிகரிப்பு என்பது வெறும் மாற்று யோசனையே என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# திருப்பதி செல்லும் பிரதமர்

(கொழும்பு)

திருப்பதி செல்லும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக இந்தியாவின் திருப்பதி ஏழுமலை வெங்கடாசலபதி ஆலயத்திற்குச் செல்லவுள்ளார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி இந்தியா செல்லும் பிரதமர் எதிர்வரும் 26 ஆம் திகதி நாடு திரும்ப உள்ளதாக பிரதமரின் அலுவலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)



# நைஜீரியாவிடமும் கடன் கோரும் இலங்கை அரசாங்கம்

(கொழும்பு)

நீண்டகால கடன் அடிப்படையில் நாட்டுக்கு கச்சா எண்ணெயை வழங்குமாறு நைஜீரியாவிடம் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் நைஜீரிய தூதுவருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அமைச்சர் கம்மன்பில இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்நியசெலாவணி நெருக்கடி காரணமாக எரிபொருளை இறக்குமதி செய்வது தொடர்பில் நாடு பெரும் சிக்கலான நிலைமையை எதிர்நோக்கி வருகிறது.

இதன் காரணமாக நீண்டகாலக்கடன் அடிப்படையில் எரிபொருளை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக அரசாங்கம் ஏற்கனவே சில நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# இன்று ஒரு தகவல்

## இரவுப் பொழுதில் சில எண்ணங்கள்

எதிர்காலத் திட்டங்களையும், கடந்த காலத் தவறுகளையும், நிகழ்கால நடப்புகளையும் பற்றிச் சற்றும் சிந்திக்காமல் வாழ்ந்து காலத்தை ஓட்டுவது என்பது, பிரேக் இல்லாத ஒரு வாகனத்தை மலைச்சரிவில் ஓட்ட முயல்வதற்கு ஒப்பாகும்.

நம்மில் எவ்வளவு பேர் இவற்றைப் பற்றியெல்லாம் சிந்திக்கிறோம்? மிகக் குறைவுதான், ஏதோ முடுக்கிவிடப்பட்ட இயந்திரமாய் வாழ்வதில் ஒரு பயனும் இல்லை.

தூங்க முடிவு செய்து கண்ணை மூடியவுடன், கண்ட கண்ட நினைப்புகளுக்கு இடம் தராமல், இன்றைய பொழுது எப்படிச் சென்றது. எழுந்தது முதல் உறங்க முயலும் இந்நேரம் வரை என்று மெல்லச் சிந்திக்கத் தொடங்க வேண்டும்.

அவசர அவசரமாக வாழும் இந்த இயந்திர வாழ்நாளின் அன்றைய சாரத்தை இரவுப் பொழுதின் போது மெல்ல நினைவுக்குக் கொண்டு வந்து அசைபோட வேண்டும்.

இரவுப் பொழுது சலனமற்றது. அப்போது சிந்தனைத் தெளிவு மேலோங்கி இருக்கும். மனசாட்சி, மற்ற நேரங்களைவிட அப்போது தான் முழு ஆற்றலுடன் செயற்படும். எனவே நடந்து முடிந்த நாளின் நடைமுறைகளைத் தெளிவாக எடைபோட முடியும்.

இன்றைய பொழுது எப்படிக் கழிந்தது?

குறித்த நேரத்தைப் பின்பற்றினோமா?

முன்பு எடுக்கப்பட்ட தவறான முடிவுகளின் இன்றைய விளைவுகள் நம்மை எந்த வகையில் பாதித்தன?

செய்யும் தொழிலைத் தெய்வமாக எண்ணி, சம்பந்தப்பட்டவர்களுடன் நன்றியுணர்வோடு நடந்து கொண்டோமா?

கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றினோமா?

இன்று எவ்வளவு பொய்களைச் சொன்னோம்?

உடல் நலம் கெடும்படியான காரியங்கள் என்னென்ன செய்தோம்?

யார் யாரைப் பற்றியெல்லாம் தவறாகச் சொன்னோம்?

எத்தனை பேர் மனம் புண்படும்படி நடந்து கொண்டோம்?

வீண் செலவு எவ்வளவு செய்தோம்?

எவ்வளவு விடயங்களைத் தள்ளிப் போட்டோம்?

இன்று நாம் கற்றுக் கொண்ட பாடங்கள் என்னென்ன?

என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே செல்லக் கூடிய கேள்விகளை நாமே எழுப்பிக் கொண்டு அவற்றிற்கான விடைகளைத் திரைப்படம் போல நம் மனக்கண்முன் ஓட்ட வேண்டும்.

இவற்றையெல்லாம் எண்ணினால் எனக்குத் தூக்கம் வராது என்று சொல்பவர்கள், மற்ற வேளைகளிலாவது பதினைந்து நிமிடம் வரை ஒதுக்க வேண்டும்.

அப்படிச் செய்ய முடியுமானால்– விடைகள் கிடைக்கும். விடைகள் கிடைக்க கிடைக்க மனத்தில் தெளிவு பிறக்கும். ஞாபகசக்தி பெருகும்.

குறைகள் குறையும், நிறைகள் நிறையும்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## நானே ராஜா

ஆனால், உனது கெட்ட குணங்களை எல்லாம் நீ மாற்றிக்கொள்ள வேண்டும் என்று தான் உன்னைக் கேட்டுக் கொள்கிறேன்," என்றது கரடி.

"கரடியே! எது கெட்ட குணம், எது நல்ல குணம் என்பதையெல்லாம் நானறிவேன். அதனைப் பற்றி உனது அறிவுரை எனக்குத் தேவையில்லை. நான் வருகிறேன்" என்று கூறியபடி சென்றது நரி.

கரடியும், அமைதியுடன் தனது இருப்பிடத்திற்குச் சென்றது.

மறுநாள் சிங்கத்தை சந்தித்தது நரி. "சிங்கராஜா! வணக்கம். நாட்கள் செல்லச் செல்ல நீங்கள்தள்ளாடும் நிலையில்தான் இருக்கிறீர்கள் போன்று தெரிகிறதே! இப்போதெல்லாம் உங்களுக்கு அதிகமாக வயதாகி விட்டதைப் போன்ற தோற்றம் தெரிகிறது" என்றது.

"உண்மைதான்நரியே! நீ சொல்வது உண்மைதான்! நான் இப்போது முன்பை விட இன்னும் அதிகமானவயதானதோற்றத்துடன் இருக்கிறேன்.

எனவே, நான் உடனடியாக புதிய தலைவரை தேர்ந்தெடுக்கும் நிலையில் உள்ளேன். நீ இருக்கிறபோது, அந்தப் புதிய தலைவருக்கு கவலையில்லை.

நாளை நான் அனைத்து விலங்குகளையும் அழைத்துக் கூட்டம் நடத்தவுள்ளேன். அந்தக் கூட்டத்தில் விலங்குகளின் கருத்தினைக் கேட்டு உன்னைத் தலைவராக தேர்ந்தெடுக்கப் போகிறேன்" என்றது சிங்கம்.



"சிங்கராஜாவே மன்னிக்க வேண்டும். நான் தலைவராக வருவது உங்களின் மன விருப்பத்தைப் பொறுத்தது.

இதில் ஏன் நீங்கள் மற்ற விலங்குகளின் கருத்தினைக்கேட்டிட வேண்டும். உங்களின் கருத்தே போதும்! நான் தலைவராகதங்களுடைய சொந்தக் கருத்தே போதும் என்று நினைக்கிறேன்," என்றது நரி.

"நரியே! உன் எண்ணம் தவறானதாகும். இந்தக் காடு எனக்கு மட்டும் சொந்தமானதல்ல! இது அனைத்து விலங்குகளுக்கும் சொந்தமானதாகும்.

எனவே, நான் உனக்கு மட்டும் தலைவனல்ல! அனைத்து விலங்குகளுக்கும் தலைவன். அதனால் நான்தான் எல்லோரையும் கலந்து ஆலோசித்திட வேண்டும் என்ற முடிவோடு மற்றவிலங்குகளின் கருத்தைக் கேட்க உள்ளேன்," என்றது சிங்கம்.

அதனைக் கேட்ட நரிக்கு, வெறுப்பாக இருந்தாலும், பதில் எதுவும் பேச முடியாமல் அமைதியாக இருந்தது.

அதே நேரத்தில், கரடியானது நரி கூறியதை மற்ற விலங்குகளிடம் எடுத்துரைத்தது.

"என்ன... நரிக்கு ஆதரவு கொடுக்காத விலங்குகளை எல்லாம் அது பழிவாங்கிடுமா? இந்தக் கெட்ட எண்ணம் கொண்ட நரியானது தலைவராக வருவதில் எனக்கு விருப்பமில்லை" என்றது குரங்கு.

அதனைத் தொடர்ந்து மற்ற குரங்குகளும் அதேகருத்தினை ஆமோதித்தன. (தொடரும்)


# மகாபாரதம்

**கல்வி, அறம், பொருள், இன்பம்**

பார்வதி ஈஸ்வரனை நோக்கிக் கல்வி, அறம், பொருள், இன்பம் பற்றி விளக்கு மாறு வேண்டிக் கொள்ள, ஈஸ்வரன் கூறலானார்.

மனிதப் பிறவி மட்டுமே தொழில் செய்யும் வாய்ப்புப் பெற்றுள்ளது. ஏனைய பிறவிகளுக்கு இவ்வாய்ப்பு இல்லை.

இன்பமும், துன்பமும் மற்ற உயிரினங்களுக்கும் உண்டு. ஒருவன் எத்தொழிலை எப்படிச் செய்ய வேண்டும் என்ற அறிவு அவனுக்குக் கல்வியினாலேயே அமையும்.



280

கல்வியால் அறிவு விரிவடைகிறது. அறிவினால் உண்மையை அறிய முடிகிறது. உண்மையை உணர்ந்தவன் பொறாமை, அவா, சினம் முதலான மாசுகளை அகற்றி மனத்தைத் தூய்மையாய் வைத்துக் கொள்வான்.

கல்வியால் ஒருவன் எங்கு சென்றாலும் சிறந்த வாழ்க்கை நடத்த முடியும். ஆதலால் ஒவ்வொருவரும் கல்வியால் தம்மை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

கல்வி அறிவினால் நன்மை தீமை களைத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். மனத்தில் தோன்றும் சினம், ஆசை முதலிய குற்றங்களைப் போக்கி ஆன்மத் தூய்மையுடன் விளங்க வேண்டும்.

பெரியோரைப்போற்றி வழிபட வேண்டும். மனமானது குடும்பத்தில் வழிவழியாய் வரும் ஒழுக்கத்தைப் பற்றும். ஆதலால் நல்ல குடும்பத்தில்பிறப்பதற்காகத்தான தருமங்கள் முற் காலத்தில் விதிக்கப்பட்டன.

ஒருவன் கல்வியின் மூலமாக வாழ வேண்டும் என கருதுவானாயின், ஒரு நல்ல ஆசிரியரிடம் பயிற்சி பெற வேண்டும். கற்ற கல்வியை மேலும் மேலும் நல்ல நூல்களைப் படித்து அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உழவுத்தொழில்மூலம் ஒருவர் வாழ நினைத்தால்நல்ல நீர்வளம் நிறைந்த இடத்தை நாடி உழவுத்தொழிலை மேற்கொள்ள வேண் டும்.

வாணிபத்தை மேற்கொள்வதாயின் காலத்திற்கு ஏற்றவாறு மிக நுணுக்கமாக விலை மாற்றங்களைச் செய்து சாதுர்யமாக வாழ வேண்டும். பத்து, பதினைந்து பசுக்களைவைத்து பால்வியாபாரம் செய்யலாம்.

ஒரு முதலாளியிடம் வேலை செய்யும் தொழிலாளி தான் வாங்கும் பணத்தைவிடப் பல மடங்கு வேலை செய்து முதலாளியின் நன்மதிப்பைப் பெற வேண்டும்.

முதலாளியும் அத்தகைய தொழிலாளியிடம் மிகவும் அன்பு கொண்டு தன் குடும்பத்தில் ஒருவனாகக் கருதி அவன் தேவையை நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் நாட்டில் தொழில் பெருகும், வாணிபம் செழிக்கும்.

இடம், காலம், மூலதனம்,செய்திறம் ஆகியவற்றை ஆராய்ந்து தெய்வத்தாலோ மனிதனாலோ இடையூறு நேரா வண்ணம் எண்ணிப் பார்த்து ஒரு தொழிலைத் தொடங்க வேண்டும். கிடைத்த பொருளைக் காப்பாற்ற வேண்டும்.

மேலும் மேலும்பெருக்க வேண்டும். இடைவிடாமல் தொழிலைச் செய்ய வேண்டும். ஆராய்ந்து பாராமல் இருப்பதே போதும் என்று தொழில்புரியாமல்உண்பவனுடைய செல்வம் மலையளவு இருந்தாலும் நாளாவட்டத்தில் அழிந்து விடும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்து போனவனின் செருப்புகளுக்குக் காத்திருப்பவன் வெறுங் கால்களுடனே நடக்க வேண்டி வரும். – டெனிஷ் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்குபோய் முடியுமோ இறைவா! கச்சியேகம்பனே!

மாடுண்டு கன்டுண்டு மக்களுண்டென்று
மகிழ்வதெல்லாம்
கேடுண்டு எனும்படிகேட்டு விட்டோம்.
இனிக் கேண் மனமே
ஓடுண்டு கந்தையுண்டு...
என்று பாடுவார் பட்டினத்தடிகள்.

இவ்வாறு அவர் பற்றறுத்து பாடியமை யதார்த்தத்துக்குப் பொருத்தமா? என்று நாம் நினைப்பதுண்டு.

பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை என்று கூறியவர்கள் மத்தியில், பட்டினத்தடிகளின் மேற்போந்த பாடல் பொருளாதார சிந்தனையை கடிகிறது என்று நினைத்தபோது,

இல்லை. பட்டினத்தடிகள் நம் இலங்கை மக்களுக்காகவே அப்பாடலைத் தந்துள்ளார் என உணர முடிந்தது.

ஆம், செல்வம் தரக்கூடிய மாட்டை, கன்றை வளர்ப்பதற்கு முடியவில்லை. அந்தளவுக்கு கால்நடைத் தீவனம் யானை விலை குதிரை விலையாகப் போகிறது.

நாற்பது ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ தவிடு நூறு ரூபாயாக விற்பனை செய்யப்படும்போது, மாடு வளர்ப்பவர்கள் எங்ஙனம் ஈடுகொடுக்க முடியும்.

ஆகையால் மாடு, கன்று என்பவற்றால் எந்தப் பிரயோசனமும் ஏற்படாது.

தவிர, இப்போது உணவுப் பொருட்களின் விலை சொல்லிமாளா.

சந்திரிகா அம்மையாரின் காலத்தில் வெறும் மூன்று ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு இறாத்தல் பாண் இன்று 85 ரூபாவுக்கு விற்பனையாகிறது.

இஃது இன்னும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பால்மாவைக்கற்றுக்கள் அதிஉயர் விலைக்கு வந்துவிட்டதாயினும் அதற்கும் பெருந்தட்டுப்பாடு.

சரி, தேநீர் வைத்து பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம் என்றால், அந்தோ! எரிவாயு சிலிண்டர்கள், அடுப்புகள் எப்போது வெடித்து எவர் உயிரைக் காவு கொள்ளும் என்பது தெரியாமல் உள்ளது.

போதாக்குறைக்கு தறுக்கணித்த நெற்பயிர்கள் கருகிக்கிடக்க, எம் வயிறு பற்றி எரிகிறது.

அந்தோ! வயல் விதைத்து அறுவடை செய்து மூடையில் நெல் அடுக்கி சீவியம் போக்கிய காலமெல்லாம் ஒரு கணப்பொழுதில் அழிந்துவிட, பெற்றவர்கள் பிள்ளைகளை வளர்ப்பது எங்ஙனமோ.

ஆதலால்தான் மாடு, கன்று, மக்கள் எல்லாம் மகிழ்வல்ல. அவை வில்லங்கம். இனி கந்தை உடுத்து கையில் மண்டை ஓடு எடுத்து ஐயா! தர்மம் என்று இரப்பதுதான் ஒரே வழி என்பதையே பட்டினத்தடிகள் பக்குவமாய் பாடி வைத்தார் என்று உணர்ந்தோம் கச்சியேகம்பனே

# எல்லை தாண்டும் இந்திய மீன்பிடி படகுகள் அரசுடைமையாக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பினுள் நுழைகின்ற இந்திய மீன்பிடிப் படகுகள் கைது செய்யப்பட்டு சட்ட ரீதியாக அரசுடைமையாக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - மயிலிட்டித் துறைமுகத்திற்கான விஜயத்தினை நேற்று மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய இழுவை வலைப் படகுகளை பார்வையிட்ட பின்னர் பிரதேச கடற்றொழிலாளர்கள் மற்றும் துறைமுக நிர்வாகத்தினருடனான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்தோடு மயிலிட்டித் துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினையும் இலங்கையின் கடல் வளத்தையும் பாதிக்கும் வகையில் எல்லை தாண்டி வந்து சட்ட விரோதத் தொழில் முறைகளில் ஈடுபடுகின்ற இந்திய கடற்றொழிலாளர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்கிய ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற கடற்படையினருக்கும் வடக்கு கடற்றொழிலாளர்கள் சார்பில் நன்றி தெரிவிப்பதாகத் தெரிவித்தார்.

மேலும், அரசுடைமையாக்கப்படுகின்ற படகுகளை பிரதேச கடற்றொழில் சங்கங்களிடம் கையளித்து, ஆழ்கடல் மீன்பிடி போன்ற சட்ட ரீதியான தொழில்களில் ஈடுபடுவதற்கு பயன்படுத்தப்படும் எனவும் அவ்வாறு பயன்படுத்த முடியாத படகுகளை விற்பனை செய்து இந்தியக் கடற்றொழில் படகுகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈட்டினை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

(ஞா-18,33,104)

## இனந்தெரியாத கும்பல் மீனவர் மீது தாக்குதல்

### வடமராட்சிப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு, முள்ளியானில் நேற்று முன்தினம் மீன்பிடிக்க சென்று வீட்டிற்கு வந்த மீனவர் மீது சிவில் உடையில் வந்தவர்கள் கொடூரத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

குறித்த தாக்குதலை 5 பேர் கொண்ட கும்பல் மேற்கொண்டதாக பாதிக்கப்பட்ட மீனவரான ராஜ்குமார் (வயது - 34) தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,நான் மீன்பிடிப்பதற்கு கடலுக்குச் சென்ற நேரம் சிவில் உடையில் வந்த ஐவர் அடங்கிய கும்பல் என்னை விசாரித்தனர். இதன்போது பயந்து நடுங்கிய எனது குடும்பஸ்தவர்கள் எனக்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு என்னை வீட்டிற்கு வருமாறு அழைத்தனர்.

தொலைபேசி அழைப்பினை தொடர்ந்து நானும் வீட்டிற்கு வந்தேன். அப்போது அங்கிருந்தவர்கள் எனது கை மற்றும் கால்களை கட்டிவிட்டு அவர்கள் வந்த ஜீப்பிற்குள் என்னை ஏற்றிவிட்டு விக்கெட் மற்றும் கொட்டனால் என்னை தாக்கினர்.

இதனால் நான் மிகவும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளேன் என அவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஞா-18,33,60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 23ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், ஆசிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி)

## மாணவர்களுக்கான சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மாணவர்களிடையே சிறுவர் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு யாழ். மருத்துவ சங்கத்தினால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் சித்திரப் போட்டி ஒன்றை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இப்போட்டி வயதடிப்படையில் 3 பிரிவுகளாக வகுக்கப்பட்டு நடத்தப்படும்.

இப் போட்டியில் வடமாகாணத்திலுள்ள சகல பாடசாலை மாணவர்களும் பங்குபெறலாம் என யாழ். மருத்துவ சங்கத் தலைவர் பேராசிரியர் கீதாஞ்சலி சத்தியதாஸ் அறிவித்துள்ளார். (5)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

பிறகு அவனிடம், பயப்படாதே. நம்பிக்கையோடு தண்ணீரின் மேல் நட. ஆனால் ஒன்று, நம்பிக்கை இழந்தாயானால் அந்தக் கணமே நீரில் மூழ்கிவிடுவாய்" என்று கூறினார்.

அந்த மனிதனும் கடலின்மீது எளிதாக நடந்து சென்று கொண்டிருந்தான். அப்போது, துணியின் முனையில் முடிந்திருப்பது என்னவென்று பார்க்க அவனுக்கு மிகுந்த ஆவல் உண்டாயிற்று.

முடிச்சை அவிழ்த்துப் பார்த்தான். அங்கே வெறும் ராம நாமம் எழுதப்பட்டிருந்தது. இது என்ன! வெறும் ராம நாமம்தானே எழுதியிருக்கிறது" என்று நினைத்தான். சந்தேகம் வந்தது. மறுகணமே கடலில் மூழ்கிவிட்டான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

37

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்




ஜாவானிய மொழி முன்பு பிராமி எழுத்துக்களில் இருந்து எழுதப்பட்ட எழுத்துடன் எழுதப்பட்டது. இது ஹனசராகா அல்லது காரகன் என்று அழைக்கப்பட்டது. இந்தோனேசிய சுதந்திரத்தின் பின்னர் அது லத்தீன் எழுத்துக்களின் வடிவத்துடன் மாற்றப்பட்டது.

ஜாவானீஸ் இந்தோனேசியாவின் உத்தியோகபூர்வ மொழியாக ஆக்கப்படவில்லை என்றாலும், அது ஜாவானியர்கள் பெரும்பான்மையான பகுதிகளில் தொடர்பு கொள்வதற்கான பிராந்திய மொழியின் அந்தஸ்தைக் கொண்டுள்ளது. இந்த மொழியை ஒரு இன மொழியாகவும் பார்க்க முடியும், ஏனெனில் இது ஜாவானிய இன அடையாளத்தின் வரையறுக்கும் பண்புகளில் ஒன்றாகும்.

மலேசியாவில் (சிலாங்கூர் மற்றும் ஜோகூர் மாநிலங்களின் மேற்கு கடற்கரை பகுதியில்) மற்றும் சிங்கப்பூரில் ஜாவானிய மொழி பேசுபவர்கள் உள்ளனர். ஜாவானீஸ், சுரினாம், இலங்கை மற்றும் நியூ கலிடோனியாவில் உள்ள ஜாவானிய வம்சாவளியைச் சேர்ந்த பாரம்பரிய குடியேறிய சமூகங்களால் பேசப்படுகிறது.

இந்தோனே சிய மொழியுடன், ஜாவானீஸ் இந்தோனேசியாவின் யோக்ஜகார் தாவின் (Yogyakarta) சிறப்பு பிராந்தியத்தில் அதிகாரபூர்வ மொழியாக உள்ளது.




உரு 34 ஜாவானிய எண்முறைமை

### ஜாவானிய எண் முறைமை

இது இந்து-அரபு எண் முறையைப் போன்றது. இந்து-அரபு எண்களைப் போலவே ஜாவானிய எண்களும் எழுதப்படுகின்றன. உதாரணமாக, 75 என்பது ஜாவானிய எண்கள் 7 மற்றும் 5 உடன் எழுதப்பட்டுள்ளது. எண்களை உரு 34 இல் பார்க்கவும்.

### போரோபுதூர் புத்தகோவில் (Borobudur)

மத்திய ஜாவாவில் 8 ஆம் நூற்றாண்டில் பலம் வாய்ந்த அரசு ஒன்று உருவானது. பின்னர் மாத்தாரம் அரசு எனப் பெயர் பெற்ற அதன் மன்னர்கள் சைலேந்திரர் (மலை அரசர்) என்னும் இந்தியப் பட்டப் பெயரைச் சூட்டிக் கொண்டனர்.


அவர் கள் கட்டிய கோயில்களுள் போரோ புதூர் (Borobudur) மிகவும் புகழ் பெற்றது. இதை சமரதுங்கா என்பவர் 8 ஆம் நூற்றாண்டில் கட்டினார்.

9 ஆம் நூற்றாண்டின் மத்தியில் சைலேந்திரர்களின் அரசு ஸ்ரீவிஜயா அரசைத் தன் குடையின் கீழ்க் கொண்டு வந்தது. பிரமாண்டமான இக்கோயில் பராமரிக்கப்படாததால் 11 ஆம் நூற்றாண்டில் மெல்ல மெல்ல மண்ணுக்குள் புதைந்து போனது.

14 ஆம் நூற்றாண்டில், ஜாவாவின் பௌத்த, இந்து அரசுகள் வீழ்ச்சியுற்றன. ஜாவாவில் இஸ்லாம் தலையெடுத்ததோடு போரோ புதூர் கைவிடப்பட்டதாகச் சான்றுகள் கூறுகின்றன. 100 வருடங்களுக்கு முன்பு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கோயிலைத் தோண்டியெடுத்து புதுப்பித்தார்கள். 1814 ஆம் ஆண்டில் ஜவாவின் பிரித்தானிய ஆட்சியாளராக இருந்த தாமஸ் ராஃபில்ஸ் (Thomas Raffles) என்பவ ரால் இது மீண்டும் கண்டிபிடிக்கப் பட்டு வெளிச்சத்துக்கு வந்தது.

இதன் பின்னர் இந்த நினைவுச் சின்னம் பல தடவைகள் புதுப்பிக்கப் பட்டது.

போரோபுதூர் புத்தகோவில் (Borobudur)



இந்தோனேசிய அரசும், யுனெஸ்கோவும் இணைந்து செயற்படுத்திய பெரிய அளவிலான மீளமைப்புத் திட்டம் ஒன்று 1975 ஆம் ஆண்டுக்கும் 1982 ஆம் ஆண்டுக் கும் இடையில் முன்னெடுக்கப்பட்டது.

அன்று முதல் இன்று வரை போரோ புதூர் கோயில் இந்தோனேசியாவின் தேசியச் சின்னமாகவும் சரித்திர புகழ்பெற்ற தலமாகவும் கம்பீரத்துடன் காட்சியளிக்கிறது. இதனைத் தொடர்ந்து இந்த நினைவுச்சின்னம் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியக் களங்களில் ஒன்றாகப் பட்டியலிடப்பட்டது.

### பிரம்பானான் கோயில்

பிரம்பானான் கோயில் (Pram banan) என்பது ஒன்பதாம் நூற்றாண்டில் இந்தோனேசிய யாவாப் பகுதியில் அமைக்கப்பட்ட இந்து ஆலயம் ஆகும்.

யாவாவின் ஒன்பதாம் நூற்றாண்டு பௌத்த வம்சமான சைலேந்திர வம்சத்துக்குப் போட்டியாக இந்து வம்சமான சஞ்சயவம் சத்தால் அமைக்கப்பட்டதே இப்பிர மாண்டமான இந்துக் கோயில் ஆகும்.

இக்கோயிலின் பிரமாண்டக் கட்டமைப்பானது, மத்திய ஜாவாவின் மாதாராம் அரசில், மகாயான பௌத்தத்தின் [illegible]வால் வீழ்ச்சியடைந்திருந்த இந்து அல்லது சைவ சமயம், பழையபடிக்கு முன்னிலைக்கு வர ஆரம்பித்ததைச் சுட்டுவதாக ஆய்வாளர்கள் சொல்கின்றனர்.

இதை அமைத்தவர், சஞ்சய வம்ச மன்னன் "ராகாய் பிகாதன்" என்று நம்பப்படுகின்றது. பிகாதனால் கி.பி. 850 அளவில் ஆரம்பமான இதன் கட்டுமானம், மன்னன் லோகபாலனாலும் பாலிதுங் மகாசம்பு மன்னனாலும் கட்டி முடிக்கப்பட்டது. அதன் பின்னும், இக்கோயில், தட்சன், துலோதுங் முதலான பிற்கால மன்னர்களால் விரிவாக்கம் பெற்றிருக்கிறது. 930களில், ஈசியான வம்சத்து இம்பு சிந்தோக் மன்னனால் மாதாராம் அரசு, கிழக்கு யாவாவுக்கு இடமாற்றப்பட்டதை அடுத்து, பிரம்பானான் வளாகம் பொலிவிழக்கத் தொடங்கியது.

பின்பு முற்றாகக் கைவிடப்பட்ட பிரம்பானான், பதினாறாம் நூற்றாண்டில் இடம்பெற்ற பாரிய பூமியதிர்வு ஒன்றால் பெருத்த சேதமடைந்ததுடன், சிதைந்த அப்பிரமாண்டக் கோயில் இடிபாடுகள் உள்ளூர்வாசிகளை அச்சுறுத்தியதுடன், அதைச் சுற்றி சுவாரஸ்யமான மீமாந்தக் கதைகளையும் கட்டச் செய்தது.

சிதைந்துபோய் காட்டுக்குள் உடைந்தொழிந்து கிடந்த பெருங் கோயில் பற்றி உள்ளூர் வாசிகள் அறிந்திருந்தாலும், அதன் வரலாற்று முக்கியத்துவத்தை அறிந்திருக்கவில்லை.

இப்பகுதியில் கிடைத்த சிற்பங்களையும் கற்களையும் எடுத்துச் சென்று, அலங்காரப் பொருட்களாகவும் கட்டுமானங்கள் அமைக்கவும் பயன்படுத்துவதே தொடர்ந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முச்சக்கரவண்டி...

தாக முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேன தெரிவித்துள்ளார்.

அதன்படி முதல் கிலோமீற்றருக்கான கட்டணத்தை அதிகபட்சமாக 80 ரூபாயாலும் இரண்டாவது கிலோமீற்றரில் இருந்து அறவிடும் கட்டணத்தை 45 ரூபாயாலும் அதிகரிக்கத் தீர்மானித்தாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஞா)

## 24 பேர்...

தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,795 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## வெதுப்பக...

பாட்டு விலைகள் நேற்று நள்ளிரவு முதல் இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதன்மூலம் 450 கிராம் எடையுள்ள பாண் மற்றும் வெதுப்பக உற்பத்திகளுக்கு உற்பத்தியாளரான வெதுப்பகமே விலையை நிர்ணயிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)

## இரு உறுப்பினர்...

காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் பரமானந்தம் தவமணி மற்றும் காரைநகர் அமைப்பாளர் கணபதிப்பிள்ளை நிமலதாசன் ஆகிய இருவருமே கட்சியை விட்டு நீக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

காரைநகர் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் நடுநிலை வகிப்பது என்ற முடிவுக்கு மாறாகச் செயற்பட்ட காரணத்தினால் அவர்களை கட்சியிலிருந்து விலக்க முடிவு எடுக்கப்பட்டது என க.சுகாஷ் தெரிவித்தார். (ஞா-18,33,104)

## புலம்பெயர்...

இலங்கை வந்துள்ள அவுஸ்திரேலிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திருமதி கெரன் அன்ட்ரூஸ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையை பிராந்தியத்தின் கல்விக் கேந்திரமையமாக மாற்றுவதற்கு உதவுவதாக அவுஸ்திரேலிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திருமதி கெரன் அன்ட்ரூஸ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தபோது அவரிடம் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் பட்டப்படிப்புகளைப் படிக்க விரும்பும் பிற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பொருத்தமான பாடநெறிகளின் ஆரம்ப கட்டத்தை இலங்கையில் தொடர்வதற்குத் தேவையான கல்வி நிறுவனங்களை இலங்கையில் நிறுவுவதன் மூலம் இந்த வாய்ப்பு வழங்கப்படுவதாக திருமதி அன்ட்ரூஸ் சுட்டிக்காட்டினார். (ஞா)

## பட்டக்கயிற்றில்...

பகுதியில் பதிவாகியுள்ளது.

புலோலி - கம்பாவத்தை கிராமத்தில் இளைஞர்கள் சிலர் பட்டம் ஏற்றியுள்ளனர்.

பட்டம் இளைஞர்களின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்ட நிலையில், 27 வயதான இளம் குடும்பஸ்தர் நடராசா மனோகரன் பட்டத்தின் கயிற்றை விடாது பற்றியுள்ளார்.

பட்டம் உயரப் பறக்கும் வேகத்தில் குறித்த நபரும் கயிற்றுடன் மேலே கொண்டு செல்லப்பட்டமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சுமார் 5 நிமிடங்கள் வரை பட்டத்தின் கயிற்றை இறுக்கிப் பிடித்தவாறு செய்வதறியாது 100 அடிகளுக்கு மேல் அந்தரத்தில் குறித்த நபர் தொங்கியுள்ளார்.

பட்டத்தின் கயிறு சுமார் 30 அடிகள் வரை கீழிறங்கியபோது கைகளை விட்டவர் கீழே வீழ்ந்துள்ளார். அதன் பின்னர் சுயநினைவை இழந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தோட்டச் செய்கைக்காக பண்படுத்தப்பட்ட நிலத்தில் வீழ்ந்த இளைஞர் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சைகளின் பின்னர் அவர் தற்போது வீடு திரும்பியுள்ளார். (ஞா-60)

## கலவையில்...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த குழுவின் தலைவர் பேராசிரியர் சாந்த வல்பலகே, எரிவாயு சிலிண்டர்களின் கலவையானது பல்வேறு விபத்துக்களுக்கு காரணமாகும் என்றார்.

நவம்பர் நடுப்பகுதி மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடையில் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகிய இடங்களை அவர்கள் அவதானித்ததாக கூறினார். எரிவாயு கலவையில் ஏற்பட்ட மாற்றமே முக்கிய காரணம் என்று பேராசிரியர் வல்பலகே கூறினார். (ஞா)

சாவகச்சேரியில் அதிர்ஷ்டம் தொடர்கிறது
சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பு 09.12.2021 அன்று விற்பனை செய்யப்பட்ட **அபிவிருத்தி அதிர்ஷ்டம்** சீட்டிழுப்பின் மூலம்
5 இலட்சம் ரூபாய் வெல்லப்பட்டுள்ளது.
அடுத்த விசேட சீட்டிழுப்புகள்
கோடிபதி கப்ருக (30.12.2021) - 12 கோடியில் ஆரம்பிக்கும் சுப்பர் பிரிவு
மஹஜன சம்பத (31.12.2021) - 1 கோடிக்கும் அதிகமான சுப்பர் பரிசுடன் பல விசேட பரிசில்களும் உண்டு.
(C-3326) க.பிரதாஸ் சாவகச்சேரி 077 357 8224

## நீண்ட இழுபறி...

கொழும்பு, பம்பலப்பிட்டி, குளோபல் டவர் ஹோட்டலில் நேற்று தமிழ் பேசும் கட்சிகளின் கலந்துரையாடல் நடைபெற்றது.

நேற்றைய கூட்டத்தின் ஆரம்பத்தில், கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சம்பந்தன்,

13ஆவது திருத்தத்தை தன்னால் ஏற்க முடியாதென்றும், அதற்கு எதிராக பாராளுமன்றத்தில் பலமுறை பேசிவிட்டு, கையெழுத்திட முடியாதென்றும் எல்லோரும் அந்த தீர்மானத்திற்கு வந்தால் விருப்பமின்றி கையெழுத்திட வேண்டியேற்படும். 13 என குறிப்பிடாமல் வேறொரு வார்த்தையை கண்டுபிடிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதன்படி, ரெலோ தயாரித்த ஆவணத்தில் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு கோரப்பட்ட வசனம் மாற்றப்பட்டு, 1987ஆம் ஆண்டு இந்திய இலங்கை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட அனைத்து சரத்துக்களையும் அமுல்படுத்தும் பொறுப்பு இந்தியாவிற்கு உள்ளது. தமிழ் மக்கள் சார்பாக கையெழுத்திட்ட இந்தியா, தனது கடமையை நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

1987ஆம் ஆண்டு உடன்படிக்கையில் குறிப்பிட்டிருந்த காணி, பொலிஸ் மற்றும் பல நிர்வாக அதிகாரங்கள் அரசாங்கங்களால் பறிக்கப்பட்டுள்ளன. சட்டமியற்றும் உரித்தும் தடுக்கப்பட்டுள்ளது. அரச நிர்வாகமும் மத்திய அரசிற்கு மாற்றப்பட்டு விட்டது. அதிகாரங்கள் ஆளுநருக்கு பகிரப்பட்டு விட்டது. இவை அனைத்தையும் இல்லாமலாக்கி 1987 ஆம் ஆண்டு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டபடி, ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தும்படி புதிய வரைபில் கோரப்பட்டுள்ளது.

இறுதிவரைபை தயாரிக்கும் பணியில் என்.சிறிகாந்தா, சுரேஷ் பிரேமச்சந்திரன், மனோ கணேசன், மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், நிசாம் காரியப்பர், செல்வம் அடைக்கலநாதன், ஆர்.இராகவன் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

மாலை 5.30 மணியளவில் புதிய வரைபு தயாரித்து முடிக்கப்பட்டது.

இந்த ஆவணம் நேற்று தட்டச்சு செய்து முடியாததால், கூட்டத்தை முடித்துக் கொண்டனர். தட்டச்சு செய்யப்பட்டு, இன்று கட்சிகளிற்கு அனுப்பப்படும். அதன்பின்னர், செல்வம் அடைக்கலநாதன் ஒவ்வொரு தலைவரையும் சந்தித்து கையெழுத்து பெறுவதாகக் கூறினார். (ஞா)

## உணவுப் பொருட்...

தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள மக்களின் நுகர்வுக்காக உணவுப்பொருட்களை கையிருப்பில் வைத்திருப்பது அத்தியாவசியமானது என்றும், ஏதேனும் ஒரு விதத்தில் உணவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால், பண்டமாற்று முறையைப் பயன்படுத்த நேரிடும் எனவும் அவர் கூறினார்.

உணவுப் பரிமாற்று முறை என்பது நாட்டில் அதிகளவில் கையிருப்பில் உள்ள உணவுப்பொருட்களை நட்பு நாட்டுக்கு கொடுத்து அதற்கு ஈடாக உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்வது ஆகும் என்றார். (ஞா)

தன நிதானய
திகதி - 2021.12.21
சீட்டிழுப்பு இலக்கம் - 653
T 09 13 40 41
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 21.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2918
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 12 21 22 67
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/12/21
சீட்டிழுப்பு இலக்கம் 4623
ஆங்கில எழுத்து X வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 5 9 8 2 8
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/12/21 1649 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 15 வெற்றி இலக்கங்கள் 01 08 45 47
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மெகா பவர்
திகதி 21/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0971
வெற்றி எழுத்து F சுப்பர் இலக்க 16 வெற்றி இலக்கங்கள் 06 64 69 80

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1426
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2021.12.21
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,981,440/-
வெற்றி இலக்கங்கள் 31 46 51 58 ஆங்கில எழுத்து N
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.12.21
சீட்டிழுப்பு இல: 3761
வர்ணம்: இளநீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.4,245,120/-
வெற்றி இலக்கங்கள் 41 42 44 48 ஆங்கில எழுத்து F
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,714,433/=
திகதி 21.12.2021
வெற்றி வாரம் 3312
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 04 05 25 56 மீனம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,584,240/=

SUPER BALL சுப்பர் போல
சீட்டிழுப்பு வாரம் 1600 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 21.12.2021 தினம் செவ்வாய்
J 43 47 53 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 50,603,326/=
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

சீட்டிழுப்பு வாரம் 781
இரத்தச்சிவப்பு
21. 12. 2021 செவ்வாய்க்கிழமை
W 14 18 34 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,654,715/-
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Physics**
**T.K.Kajan** B.sc (8930)
☎-077 653 1177

## தவறிவிட்டது

கந்தர்மடம் சந்திக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில் தேசிய அடையாள அட்டை, வாகன சாரதி அனுமதிப் பத்திரம் என்பன தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து **077 784 0762** என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும் அல்லது வலம்புரிப் பத்திரிகைக் காரியாலயத்தில் ஒப் படைத்து உதவவும்.

A/L 2021
## வணிகக் கல்வி
உதவிக் கருத்தரங்கு
**T.S. RICHI** (B.B.A (Hons), HRM (Spl.), P.G.D.E
ஆரம்பம் : 23.12.2021 (வியாழன்) 2.30 Pm
இடம் : DMI (வணிகத்துறை) - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
- புள்ளித்திட்ட விளக்கம்
- தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்
- எதிர்பார்க்கை வினாக்கள்
- 30 மணித்தியாலம் இடம்பெறும்
- வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்

**T.P : 077 206 8760** (9181)

## வேலை வாய்ப்பு
தொழில்நுட்ப உத்தியோகத்தர்
HND, NCT (Civil or QS) with 3 Years of Building Experience.
தொடர்புகளுக்கு (9180)
**Email:- vacancynsc@gmail.com**

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
## றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*
தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (9183)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
## ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9186)
**076 825 7716** (ஆகாஸ்)

## வேலை ஆட்கள் தேவை
யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள / பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை. மேலும் கணனி அனுபவமுள்ள சிட்டை எழுதுனர் இருபாலாரும் விரும்பத்தக்கது. (C-3328)
☎ **076 659 5578**

## காணி விற்பனைக்கு
**யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கனகர் வளவு 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**
14 அடிப் பாதையுடன்
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்
**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
(தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9179)
தொடர்புகளுக்கு
**077 814 7389, 070 705 1655**


## வவுனியாவில் தோட்டக்கிணற்றில் நீராடச் சென்று மாயமாகிய சிறுவன் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா கொக்குவெளிப் பகுதி யில் கிணற்றில் நீராடச்சென்ற சிறு வன் ஒருவன் மாயமா கிய நிலையில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டார்.

வவுனியா கொக்குவெளிப் பகுதியில் அமைந்துள்ள பாரிய தோட்டக்கிணற்றில் நீராடுவதற்காக சிறுவன் ஒருவன் நேற்று குதித்த நிலையில் மாயமாகியிருந்தான்.

இதனையடுத்து ஊர்மக்களுக்கு தக வல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற கிராமத்தவர்கள் கிணற்றினுள் இறங்கி தேடுதல் நடத்திய நிலையில் நீண்ட நேரமாகியும் குறித்த சிறுவனை மீட்க முடியவில்லை.

ஆயினும் கிராம மக்களின் தொடர்ச் சியான முயற்சியால் கிணற்றுநீர் வெளி யில் இறைக்கப்பட்டு இரவு 11.30 மணி யளவில் குறித்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டான்.

குறித்த சம்பவத்தில் அகிலேஸ்வரன் தனுசன் என்ற 16 வயதுச் சிறுவனே மரணமடைந்துள்ளான். (ஞா-299)


## கடை வாடகைக்கு
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கு நிலையில் சகல தளபாடங்களுடனும் கடை வாடகைக்கு உண்டு. (9163)
☎ **076 704 9048**

**NEC**
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.
**ஊடகக்கல்வி**
**A/L 2021**
கருத்தரங்கு
**M.Y.கோணேஸ்**
- பரீட்சை எதிர்பார்ப்பு வினாக்கள்
- புள்ளித்திட்ட விளக்கம்
- தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்

ஆரம்பம் : 24.12.2021
வெள்ளிக்கிழமை காலை 8 மணி
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (C-3327)
**076 535 0999**




OUR AUTHORISED DEALAR FOR
DHL FedEx ups aramex SKYNET dpd
**லங்கா மஹால் (pvt) Ltd.**
**வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவைகள்**
**11 Kg இற்கு மேல் 1 Kg இற்கு,**

| | |
|---|---|
| லண்டன் - ரூபாய் 1070 /= | இத்தாலி - ரூபாய் 1300/= |
| ஜேர்மனி - ரூபாய் 1300/= | டென்மார்க் - ரூபாய் 1300/= |
| பிரான்ஸ் - ரூபாய் 1300/= | நெதர்லாண்ட் - ரூபாய் 1300/= |
| சுவிஸ் - ரூபாய் 1300/= | பெல்ஜியம் - ரூபாய் 1300/= |

கனடா - ஆகாய மார்க்கம் ரூபாய் 1610/=
கனடா - கப்பல் மார்க்கம் ரூபாய் 600/=
(9185)
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
இல. 40, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
இல. 71, பிரதான வீதி, சங்கானை.
**077 839 3974 077 156 0268**
**077 572 4675 021 221 0135**

## வேலை ஆட்கள் தேவை
யாழ். நகரில் இயங்கும் பிரபல புகைப்பட பிரதியாக்கும் நிறுவனத்திற்கு ஆண்/ பெண் வேலையாட்கள் தேவை. (9184)
**077 773 0567**

## விரைவு பொதிகள் சேவை
**V2 TRAVELS**
**UK-975 /=Kg**
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3286)
0768226240 DHL

## உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் **V2 TRAVELS** (C-3322)
எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 20'000/-
பயிற்சியின்போது - 15'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com


# கண்ணீர் அஞ்சலி



(C-3324)

JSAC ஆளுநர் சபையின் முன்னாள்
உபதலைவரும் தற்போதைய ஆளுநர் சபை
உபதலைவர் திருமதி **மேனகா** அவர்களின்
தந்தையுமாகிய

**பிரபல சட்டத்தரணி**
## கனகரட்ணம் கேசவன்

அவர்கள் இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது இழப்பில் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**உத்தியோகத்தர்கள்**
**யாழ். சமூக செயற்பாட்டு மையம், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.